நூட
254

# கற்கண்டு

பாரதிதாசன்

முத்தமிழ் நிலையம்
தமிழ் நாடு

# கற்கண்டு

பாரதிதாசன்

1234 — 188

முத்தமிழ் மலர் நி.

முதற் பதிப்பு : அக்டோபர் 1944

மதுரை காமராசர் பல்கலைக்கழ

அவ்வை

தி.க. சண்முக

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,

நூல் வரிசை எண்: 66

நன்கொடை எண்: 66

விலை ரூ. **2-0-0**

கிடைக்குமிடம் :

முத்தமிழ் நிலையம்,

கோனாபட்டு,

புதுக்கோட்டைத் தனியரசு.

பதிப்புரிமை.

## ஆக்கியோன் முன்னுரை.

★

கற்கண்டு, பொறுமை கடலிலும் பெரிது என்னும் இவ்விரு சிறு கதைகளையும் பல ஆண்டுகளின் முன் எழுதினேன். அவைகளை என் பிள்ளை மன்னர் மன்னன் முத்தமிழ் நிலையத்தார்க்குக் காட்ட, முத்தமிழ் நிலையத்தார் அச்சுக்கு வரவேண்டுமென அவாவினர்! அவர்க்கு நன்றி!

கனக—சுப்புரத்தினம்.
(பாரதிதாசன்)

இக்கதைகளின் வரிகளையோ கருத்துக்களையோ கையாள எண்ணுவோர் ஆசிரியரைக் கேட்க வேண்டும்.

—முத்தமிழ் நிலையத்தார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியற்றுறை

# கற்கண்டு

1

புதுச்சேரியில் முதலியார் வீதி என்பதொன்று. அவ்வீதியின் முனையில் இருப்பது சிங்கார முதலியார் வீடு. சிங்கார முதலியார் புதுச்சேரியில் உள்ள பணக்காரர்களில் ஒருவர்; செல்வாக்குள்ளவர்; நல்ல பரோபகாரியுமாவார்.

அந்தச் சிங்கார முதலியார் வீட்டுக் கெதிரில் ஒரு வாரமாகத் தருமன் சிறுத்தொண்டப் பத்தன் கதை பாடி முடித்ததில் அவனுக்கு நல்ல வரும்படி. அதனால் அதே இடத்தில் சிறுத்தொண்டப் பத்தன் கதையைத் துவக்கி யிருக்கிறான் மீண்டும்.

தருமனும் அவன் சிற்றாளாகிய சின்னான் என்ற சிறு பையனும் உட்கார்ந்திருக்கிறார்கள் வீதியோரத்தில் சாக்கை விரித்துப்போட்டு! அவர்கட்கு எதிரில்

ஒரு திரை கீழே விரித்துப் போடப் பட்டிருக்கிறது. அத்திரையில், சிறுத் தொண்டப் பத்தன் கதையில் உள்ள பிரதான கட்டங்கள் சில சித்தரிக்கப்பட்டுள்ளன. கதை பாடுவதற்கு இடையில், பிரஸ்தாபத்தில் வரும் சித்திரத்தை அவன் கையில் உள்ள கோலால் ஜனங்கட்குக் குறிப்பிடுவான்.

தருமனின் இடது கை ஒன்றே இருதாளத்தையும் பிடித்துப் போட்டுக் கொண்டிருக்கும். வலது கை தான படம் காட்டுகிறதே! பக்கத்தில் உள்ள சின்னுன் ஒற்றைத் தந்தித் தம்பூராவை மீட்டுகிருன்.

பிள்ளையார் தோத்திரம் முடிந்துவிட்டது. கதை ஆரம்பமாகப் போகிறது. எதிரில் சிலர் உட்கார்ந்து கொண்டும் நின்று கொண்டும் ஆவலாயிருக்கிருர்கள் கதை கேட்க.

தருமன் : (எதிரில் உள்ளவர்களை நோக்கிக்) "கொஞ்சம் வெத்திலை இருந்தா குடுங்க" என்கின்ருன்.

பாககுப புகையிலை சகிதம் வெற்றிலை உடனே ஏற்பாடாகிறது. வாயிற்போட்டுக் குதப்பி அடக்கிக் கொள்ளுகிருன்.

தருமன் : போடடா தம்பூரை!

"திருச் செங்காட் டாங்குடியில்
சிறுத்தொண்டப் பத்தன்—அந்தச்
சிறுத்தொண்டப் பத்தன்.

திருவெண்காட் டுநங்கையை
மணம் புரிந்தான்.

கல்லாணம் செய்த பின்னே
இருவரும் கூடி — அந்த
இருவரும் கூடி
கனமாகச் சீராளனைப்
பெத்தெடுத்தார்.

சீராளன் வயசல்லோ
அஞ்சான வுடனே--நல்ல
அஞ்சான வுடனே
தெருப் பள்ளிக் கூடத்திலே
படிக்க வச்சார்.

சீராளன், பள்ளிக்கூடம் போவதாக எழுதப் பட்டிருக்கும் கட்டத்தைக் கோலால் குறிப்பிடுகிறுன் தருமன்.

கேட்பவரில் ஒருவன் சொல்லுகிறுன்: "அதானே படிக்காட்டிப்போனு என்னு பண்றது!

மற்ெருருவன்: உஸ் சும்மா இரு;

இதற்குள் சிங்கார முதலியார் வெளிவந்து தம் வீட்டுக் குறட்டில் நிற்கிருர்; முதலியாரின் குழந்தையாகிய புஷ்பரதனும் முதலியாருடன் நின்று கதையைக் கவனிக்கிருன்.

தருமன்: "இப்படி இருக்கின்ற நாளையிலே பத்தன்
நாளையிலே பத்தன்—அவன்
ஈடில்லா அன்னதானம்
செய்ய நினைத்தான்.

அன்னதானம் என்று சொல்லிச்
சிறுத்தொண்டப் பத்தன்—அந்தச்
சிறுத்தொண்டப் பத்தன்
அன்னக் கொடி தன்னை
நாட்டி விட்டான்."

தருமன் திரும்பிப் பார்க்கிருன். முதலியார் நிற்பதை அறிந்து அவரிடம் சொல்லுகிருன்:

காவற்காரர் இப்பதானுங்க போனுருங்க. நீங்க அவசரமாச் செக்கு மாத்த அனுப்பி னிங்க போல இருக்குதே "சிறுத்தொண்டப் பத்தன்"

தினந்தோறும் அன்னம்
பொசித்திடலானுர் — அடியார்
பொசித்திடலானுர்
சிவனடி யார்கூட்டம்
கூட்டமாக.

இந்தப் பையனே அனுப்பி அவசரமா அழைச்சி வரச் சொல்லட்டுங்களா? "கூட்டம் கூட்டமாக"

முதலியார்: அவனுக்கு இடந்தெரியுமா?

தருமன்: தெரியுங்க "கூட்டம் கூட்டமாக"

முதலியார்: அப்படிண்ணு அனுப்பு! நான் அவசரமா குப்புச்சாமி முதலியார் வீட்டுக்குப் போகணும்.

தருமன்: ஓடு பையா "கூட்டம் கூட்டமாக"
நூறு பேருக்குத் தினம்
சிறுத்தொண்டப் பத்தன்—அந்தச்
சிறுத்தொண்டப் பத்தன்
நோகாமல் அன்னமிட்டான்
சிறுத்தொண்டப் பத்தன்.

முதலியார்: இப்பத்தானு அவன் போனுன்?

தருமன்: ஆமாங்க "சிறுத்தொண்டப்பத்தன்"

முதலியார்: இங்கே என்னு பண்ணுன்?

தருமன்: ஒருத்தன் கிட்ட பேசிகினு இருந்தானுங்க "சிறுத்தொண்டப்பத்தன்" (புஷ்பரதனை நோக்கி) பள்ளிக்கூடம் போகலே தம்பி, "சிறுத்தொண்டப் பத்தன்" போவாணும் இண்ணு சொன்னுங்க அப்பா? "சிறுத்தொண்டப் பத்தன்"

புஷ்பரதன்: (தன் தகப்பனுரை நோக்கி.) அப்பா! ஒங்களை இவன் சிறுத்தொண்டப் பத்தன்

இண்ணும்பா. என்னியும் அப்படியே சொல்ரும்பா. நம்ப காவக்காரனைக் கூடம்பா.

முதலியார்: இல்லையப்பா பாட்டைச் சேர்ந்த பகுதி அது.

தருமன்:

ஆயிரம் பேருக்குச்
சிறுத்தொண்டப் பத்தன்—அந்தச்
சிறுத் தொண்டப் பத்தன்
அனுதினமும் அன்னம் போட்டான்
சிறுத் தொண்டப் பத்தன்.

சிறுத்தொண்டப் பத்தன், அன்னக்கொடியை நாட்டி, தினம் ஆயிரம் பேருக்கு ரெண்டாயிரம் பேருக்கு அன்னம் போட்டுவர்ரானும்.

"இப்படி இருக்கின்ற"
நாளையிலே—கைலை
நாளையிலே—கைலை
ஈசனும் பார்வதியும் பேசுகின்றார்.

கேட்பவரில் ஒருவன்: அங்கே கைலாசத்திலியா? சரி தான்.

மற்றொருவன்: கைலாசத்திலே நடக்குது.

தருமன்: "என்னடி பார்வதியே
சிறுத்தொண்டப் பத்தன்—அந்தச்
சிறுத்தொண்டப் பத்தன்
இறுமாப்புக் கொண்டாண்டி
பார்வதியே.

அன்னக் கொடி நாட்டினண்டி
பார்வதியே—அடி
பார்வதியே

அது விபரம் காண வேணும்
பார்வதியே

பெருமைக்குச் சோறு போடும்
பேர்வழியும் உண்டு.

கேட்ப: 1 ஹுங்கும்.

கேட்ப: 2 பின்னே இல்லையா!

தருமன்:

சின்னத்தனம் மறைத்திடச்
சோறிடுவ துண்டு.

கேட்ப: 1 உண்டு உண்டு.

கேட்ப: 2 சொச் சோச் சோ!

தருமன்:

சிறுத்தொண்டப் பத்தனை நான்
தெரிஞ்சி வாரேன் பொண்ணே
தெரிஞ்சி வாரேன் பொண்ணே—
அவனுக்குச்
சிவபக்தி உண்டா என்று
தெரிஞ்சி வாரேன்.

பையனும் முதலியாரின் காவற்காரனுகிய குப்பனும் கனவேகமாக வருகிறுர்கள்.

காவற்காரன்: (தருமனை நோக்கி) ரொம்ப கோவிச்சிகிறுரா எசமான் ?

என்று பயத்தோடு கேட்கிறுன்.

தருமன்: பின்னென்னு ? "தெரிஞ்சுவாரேன் பொண்ணே"—நீதான் இங்கேயே வெகு நேரமாப் பேசிக்கினு இருந்துட்டியே ? "தெரிஞ்சி வாரேன் பொண்ணே"

காவற்காரன்: நீ சொல்லிப் புட்டியே ?

தருமன் :

"என்று பார்வதி யிடம்
சொல்லி விட்டே சாமி"

நான் சொல்லவே யில்லியே

"சொல்லிவிட்டே சாமி"
எழுந்து போனுர் செங்காட்
டாங் குடிக்கே

காவற்காரன்: ஏது ஏது. ஒன்னுலே எனக்கு ரொம்பத் தொந்தரவு. இந்த எடத்தே வுட்டுக் கெளம்பு.

தருமன்: "செங்காட்டாங் குடிக்கே"
என்னியா ?
"செங்காட்டாங் குடிக்கே"

இதற்குள் எஜமான் வந்து விடுகிறார். அவர் காவற்காரனை நோக்கிக் கோபமாக: ஏண்டா எப்போ போனே இந்நேரம் என்ன பண்ணே?

காவற்காரன் : நேராப் போயி நேரா வந்தேனுங்க

தருமன் : "செங்காட் டாங்குடிக்கே"

முதலியார்: நீ பிரயோஜனமில்லே. வேறே எங்கியாவது வேலை பார்த்துக்கொண்டு போய்விடு

தருமன் : "செங்காட்
டாங்குடிக்கே,
டாங்குடிக்கே"

காவற் : இவனைப்பாருங்க நீங்க ஏமேலேகோவிச்சிகிறிங்க இண்ணு என்னைக் கேலி பண்ருனுங்க.

உடனே தருமன் ஜனங்களைப் பார்த்து உருக்கமாக "சிவனடி யார்போலே உருவெடுத்தார்."

எஜமான் உள்ளே போய் விடுகிறார். காவற்காரக் குப்பனை முதலியார் வீட்டின் குறட்டில் போட்டிருக்கும் விசிப்பலகையில் உட்காருகிறான். அச்சமயம் குப்புசாமி முதலியார் காரில் ஏறிக்கொண்டு அவ்வழியாகப் போகிறார். குப்புசாமி முதலியாரைத் தேடிக்கொண்டு சிங்கார முதலியார் இப்போது அவசரமாகப் போகப்போகிறார் என்பது தருமனுக்கு நினைவிருக்கிறது. சிங்கார முதலியார் உள்ளே உடுத்துகிறார். அவர் வெளியே வந்ததும் காவற்காரன்மேல் கோள்

மூட்டிவிடத் தருமன் திட்டம் போட்டிருக்கிறான். அதற்கு, சிங்கார முதலியார் வெளியில் வருவதற்குள் காவற்காரனை அங்கில்லாமல் அனுப்ப ஒரு யோசனை செய்தான். "ஆரையா காவற்காரரே" என்றான். காவற்காரன் "ஏன்" என்கிறான்.

தருமன் : அதோ முத்து கூப்புட்டுட்டுப் போராரு ஒங்களே.

இதைக்கேட்டுக் காவற்காரன் போகிறான். அச் சமயம் சிங்கார முதலியார் உடுத்துக் கொண்டு வெளியில் வருகிறார்.

தருமன் : சிறுத்தொண்டப் பத்தன் வீட்டுத்
தெருவில் வந்தார் — சாமி
தெருவில் வந்தார்
சந்தன நங்கை என்னும்
தாதி கண்டாள்.

முதலியாரை நோக்கி,

"நீங்க குப்புசாமி முதலியாரைத் தேடிப் போவதாயிருந்தாப் பயணத்தை நிறுத்த வேண்டியது தானுங்க.

சிங்காரமு: ஏன் ?

தருமன் : அவுரு இப்பதான் காரில் இப்டி போனாருங்க.

முதலியார்: ஓகோ அப்டியா நல்லதாப் போச்சி நீ சொன்னது. எங்கே காவற்காரன் ?

தருமன்: இங்கே தான் இருந்தாருங்க. நான் சொன்னேன், "குப்புசாமி முதலியாரு இதோ காரில் போராரு எஜமாங்கிட்ட சொல்லியா" இண்ணு, அவுரு சொன் ஞருங்க நறுக்கிண்ணு "போய் ஏமாந் துட்டு வரட்டுமே" இண்ணு, எழுந்து இப்பதான் எங்கியோ போருருங்க. நான் சொன்னேன் இண்ணு அவுருகிட்ட சொல்லி புடாதீங்க.

முதலியார்: நீ நம்ப வீட்டுக்குக் காவல்காரனுக இருக்றியா?

தருமன்: சரிங்க. அவுரு அடிப்பாருங்க.

முதலியார்: அவன் கெடக்ருன், நான் பார்த்துக் கொள்றேன்.

சின்னுன்: சரிங்க,

"சந்தன நங்கை என்னும்
தாதி கண்டாள்.
தாதி கண்டாள் — சாமியைத்
தயவு செய்தே உள்ளே
வாரு மென்ருள்.

முதலியார் உள்ளே போகிருர். காவற்காரன் வருகிருன். தருமன் வெகு உருக்கமாகப் பாட ஆரம் பிக்கிருன் ஓடி:

வெண்காட்டு நங்கையும்
ஓடிவந்தாள் அங்கே
ஓடிவந்தாள் அங்கே
விழுந்து பணிந்தாள் சாமி திருவடியில்"

காவற்காரன் (கோபமாக) எங்கடா முத்து கூப்பிட்டாண்ணியே?

தருமன்: 'அன்ன முண்ண வேணு மென்றே
அடியில் வீழ்ந்தாளம்மை—அவர்
அடியில் வீழ்ந்தாளம்மை
சோறுதிண்ண வேணு மென்றே
தொழுது நின்ருள்."

காவற்: என்னுடா கேக்றேன் நீ பாட்டுக்குப் பாட்றியே?

தருமன்: சும்மா இரையா "சோறு திண்ணவேணு மென்றே தொழுது நின்ருள்."

காவற்: என்னுடா பாட்றியே?

தருமன்: "சோறு திண்ண வேணு மென்றே
தொழுது நின்ருள்."

இதற்குள் முதலியார் காவற்காரக் குப்பனுக்குச் சேரவேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டு வெளியில் வந்து,

"இந்தா! புடி! போ நீ" என்கிருர்.

காவற்: நான் ஒரு குத்தமும் செய்யிலிங்களே. சோத்துக்கு வழியில்லாமே ஆக்கிப் புட்டிங்களே?

தருமன்: "சோறு தின்ன வேணு மென்றே தொழுது நின்ருள்"

காவற்: நான் எப்படிப் பொழைக்கிறதுங்க?

தருமன்: "சோறுதிண்ணவேணுமென்றேதொழுது நின்ருள்."

காவற்: பாருங்க அதியே அவன் திலுப்பித் திலுப்பிச் சொல்ருனுங்க.

தருமன்: "தொழுது நின்ருள்."

முதலியார்: நான் வேறு ஆள் வைச்சுட்டேன், பூடு!

முதலியார், வீட்டுக்குள் போய் விடுகிருர். காவற்காரன் மூக்கால் அழுதுகொண்டே தருமன் குந்தியிருக்கும் இடத்தைக் கடந்து போகிருன்.

தருமன்: " புருஷன் எங்கே என்று கேட்டா
ராம் சாமியார்
ராம் சாமியார்
போனுர் வெளியில் என்ரு
ளாம் அம்மை"

இந்தக் கடைசி அடியைக் காவற்காரனுடைய முகத்தைப் பார்த்துக் கேலியாகப் பலமுறை கூறுகிருன்.

காவற்காரன் மகா தொந்தரவோடு மறைகிறுன்.

தருமன்: "ஆளனில்லா வீட்டிலே

அமுதுண்ணேனம்மா—நான்

அமுதுண்ணேனம்மா

கணவனில்லா வீட்டிலே

உண்ணேனென்ருர்."

முதலியார் வெளியில் வருகிறுர். தருமன் எதிரில் ஓடி நின்று கும்பிடுகிறுன்.

முதலியார்: ஜாக்கிரதையா இரு. அவனுட்டம் நடக்காதே. வேறு என்ன தேவை உனக்கு?

தருமன்: எஜமான் தயவு இருந்தாப் போதும்.

முதலியார்: சரி. இரு.

முதலியார் உள்ளே போகிறுர். தருமன் பின்னிருந்து வெகு பக்குவமாக,

"அந்தத் துண்டே இப்படி எறிஞ்சிட்டுப் போங்க"

என்கிறுன்.

அவர் போட்டிருந்த காவியத் துண்டைத் தருமனுக்குக் கொடுத்துப் போகிறுர். தருமன் வாசற்படியின் விசிப்பலகையில் உட்கார்ந்து கொள்ளுகிறுன் காவியத் துண்டைப் போர்த்துக் கொண்டு! அச்சமயம் அவனண்டையில், புஷ்பரதன் வருகிறுன்.

புஷ்பரதன்: நீயா காவலு? அப்பா சொன்னுங்களே!

தருமன்: ஆமாந்தம்பி! உள்ளே போயி அப்பாவுது வேட்டி இருந்தா ஒண்ணு எடுத்தா!

புஷ்பரதன் உள்ளே ஓடுகிருன்.

சின்னுன்: "அப்போது வெண்காட்டம்மை
ஏதுரைத்தாள்—அம்மை
ஏதுரைத்தாள்,
அவர் வெளியில் போயிருக்கார்
என்றுரைத்தாள்."

"ஆளன் வந்தா லென்னிடம்
அனுப்பு மென்ருர்—சாமி
அனுப்பு மென்ருர்
அழைத்தால் வருவேனென்றே
சாமி சொன்னுர்."

தருமன்: மகிழ்ச்சி! போடு!

இதற்குள் புஷ்பரதன் ஒரு வேட்டியைக் கொண்டுவந்து கொடுக்கிருன். தருமன் தழைய விட்டுக் கட்டிக் கொள்கிருன்.

புஷ்பரதன்: நீ பெரிய ஆளா இருக்றியே! எங்கப்பா சொன்னுங்க. முதலிலே ஒண்ணும் வாணும் இண்ணியாம். ஒடனே துண்டு கேட்டியாம். இப்ஃபா வேட்டி கேட்டியே.

தருமன்: அப்பாவா சொன்னுங்க? தோ பாருதம்பி வேட்டி எனக்கு அழுக்கா இருந்தது. அதோட்டு தான் தம்பி.

புஷ்பரதன்: கதயைச் சொல்லேன் கேட்போம்.

தருமன்: சாமியார் வேஷத்தோடு சாமி சிறுத்தொண்டன் வூட்டுக்கு வந்தாரா?

புஷ்பரதன்: வந்தாரு.

தருமன்: சந்தண நங்கை பார்த்தாளா?

புஷ்பரதன்: பாத்தா.

தருமன்: ஒடனே கும்பிட்டு "உள்ளே வாங்க" இண்ணு. அப்றம் உள்ளே இருந்து வந்த திருவெண்காட்டு நங்கை பாத்தா. சாப்பிடச் சொன்னு. அதுக்குச் சாமி "ஊட்டுக்காரர் எங்கே" இண்ணுர். "வெளியில் போயிருக்காரு" இண்ணு. "ஆம்ளே இல்லாத ஊட்டிலே நான் சாப்பிட மாட்டேன், அவுரு வந்தா என்னைக் கூப்பிட்டு அனுப்பு;" இண்ணு சொல்லிபுட்டு கோயில் திருவாத்தி மரத்தடியிலே போயி ஒக்காந்துக்கிஞரு.

புஷ்பரதன்: ஒஹோ! அப்படியா?

தருமன்: தம்பி ஒரு விசிறி பிஞ்சிபோனது கிஞ்சி போனது இருந்தா எடுத்தாயேன்.

புஷ்பரதன் எடுத்து வந்து கொடுக்க, தருமன் வெள்ளை வேட்டி, காவித்துண்டு. கையில் விசிறி யுடன் வீட்டு முதலியார் போலவே விளங்குகிறான்.

## 2

**வீ**ரப்ப முதலியாருக்கு 70 வயது நடக்கிறது.

அவருக்குத் தலைக்கு உயர்ந்த பிள்ளைகள் இருவர் இருக்கிறார்கள். வீரப்ப முதலியார் மனைவி இறந்து போகவே வேறு கலியாணம் பண்ணிக் கொள்ள நினைத்தார். இந்த எண்ணத்தில் கொஞ்சம் மூச்சு விட்டார் தம் பிள்ளைகளிடம். பிள்ளைகள் சீறினார்கள். அது முதல் பிள்ளைகளிடம் அது விஷயத்தைச் சொல் லுவதே யில்லை.

துரைசாமி முதலியார் வீரப்ப முதலியாருக்கு 300 ரூபாய் பாக்கி செலுத்த வேண்டியதிருந்தது. வீரப்ப முதலியார் அதைக் கண்டித்துக் கேட்கவில்லை. ஏனென்றால் துரைசாமி முதலியாரால் வீரப்ப முதலி யாருக்கு முக்கியமானதோர் காரியம் ஆகவேண்டி யிருந்தது.

துரைசாமி முதலியாரும் தாரமிழந்தவர். அவருக்கு ஒரு பெண் இருக்கிறாள். அவள் பெயர் கற்கண்டு.

கற்கண்டை 70 வயது சென்ற வீரப்ப முதலியார் கட்டிக்கொள்ளுவதாகத் துரைசாமி முதலியாரிடம் கூறினர். கடன் தொல்லையாவது நீங்கட்டும் என்று நினைத்துத் துரைசாமி முதலியார் ஒத்துக் கொண்டார்.

கலியாணத்தைத் தம் ஊராகிய சிதம்பரத்தில் வைத்துக்கொள்வது சாத்தியமில்லை. வீரப்ப முதலியார் பிள்ளைகள் மலை போல் வந்து குறுக்கே நின்று விடுவார்கள்.

வீரப்ப முதலியார் ரகசிய முறையில் அறுநூறே சில்லரை ரூபாய் எடுத்துக்கொண்டு துரைசாமி முதலியார், கற்கண்டு ஆகிய இரண்டு சீவன்களையும் அழைத்துக்கொண்டு புதுவைக்கு வந்துவிட்டார்.

செட்டித் தெருவில் ஒரு வீடு காலியாயிருக்கிறது. அந்த வீட்டுக் குடையவர் எதிர் வீட்டுக்காரர். அவரைக்கண்டு வாடகை பேசி முடிக்கச் சொல்லித் துரைசாமிமுதலியாரை அனுப்பிவிட்டு அதே வீட்டின் எதிரில் தெருவில் வீரப்ப முதலியாரும், கற்கண்டும் நிற்கிருர்கள். இவ்விருவர் நிற்பதையும் பக்கத்து வீட்டின் நடைத் திண்ணையிலிருந்து ராமசாமியும் சீனுவாசனும் கவனிக்கிருர்கள்.

வீரப்பக் கிழவர் கற்கண்டை நெருங்குகிருர். கற்கண்டு விலகி ஜாடையாக கிழவரின் மறுபக்கம் மாறி நிற்கிருள். பலதடவை இப்படி.

**வீரப்ப :** கற்கண்டு

**கற்கண்டு :** ஏங்க.

**வீரப்ப :** வெத்திலே இருக்கா?

கற்கண்டினிடம் வெத்திலே இருக்காது என்பது வீரப்பக் கிழவருக்கே தெரியும்.

**கற்கண்டு :** இல்லிங்களே.!

**வீரப்ப :** வாங்கிவரச் சொல்லவா?

**கற்கண்டு :** எனக்குங்களா, நான் வெத்திலே போட்டுக்ற தில்லிங்களே.

**வீரப்ப :** ஏன் வெக்கப்படுறே? எல்லாப் பெரயாசையும் ஒனக்காகத்தானே. எல்லாம் கொண்டாந்திருக்கேன் ஒனக்கு. ஒத்துக் குடுத்தனம் பண்ணு.

**கற்கண்டு :** நல்ல குடுத்தனம் பண்ணணும் அது தான் எனக்கு ஆசைங்க.

**வீரப்ப :** அப்படி சொல்லு.

இதற்குள் குறிப்பிட்ட வீடு திறந்து விடப் படுகிறது. துரைசாமி முதலியார் "வாங்க" என்று கூப்பிடுகிறார். இருவரும் போகிறார்கள்.

தெருப்பக்கத்து அறையில் கற்கண்டு நுழைந்து ஒரு புறமாக நிற்கிறாள். வீரப்பக் கிழவர் துரைசாமி முதலியாரிடம் ஒரு ரூபாயைக் கொடுத்து,

"நல்ல பலகாரமா பாத்து வாங்கி வாரும்" என்கிறார்.

**கற்கண்டு:** நானும் வர்ரேன் அப்பா.

**வீரப்ப:** நீ ஏன்? அதெல்லாம் சரியல்ல கற்கண்டு.

**துரைசாமி:** வரட்டுமே?

**வீரப்ப:** அட சீ! என்னங் காணும் உமக்கு புத்தி கித்தி இருக்கா?

**துரைசாமி:** சரிதாம்மா நீ இரு! என்ன வாங்கிவரச் சொன்னிங்க?

**வீரப்ப:** கொஞ்சம் லட்டு, சிலேபி, அல்வா, பழம் இன்னும் என்ன ஒணும் கற்கண்டு?

**கற்கண்டு:** போதுங்க; புதுச்சேரி நெய்முறுக்கு நல்லா இருக்கும் இண்ணுங்களே.

**துரைசாமி:** அவுரு மெல்ல முடி.........

**வீரப்ப:** ஓய் தூ! ஆருங்காணும்? வாங்கி வாங் காணும் முறுக்கும்.

**துரைசாமி:** சரி.

துரைசாமி முதலியார் வெளியில் போகிறார். வெளியில் புறப்பட்ட துரைசாமி முதலியாருக்கும் அடுத்த வீட்டின் குறட்டில் காத்திருந்த ராமசாமி சீனுவாசன் ஆகிய இருவர்க்கும் கீழ்வரும் பேச்சு நடக்கிறது:

ராமசாமி : ஏனையா நீங்க எந்த ஊரு ?

துரை : செதம்பரம்.

ராமசாமி : அந்தக் கெழவர் ஆரு ?

துரை : நம்ப சொந்தக் காரரு.

ராமசாமி : அந்தப் பொண்ணு ?

துரை : நம்ப கொழந்தை

ராமசாமி : எங்கே போறிங்க இப்ப ?

துரை : பலகாரம் வாங்க

ராமசாமி : கெழவரை அனுப்பறத்தானே ?

துரை : அது சரியல்ல.

ராமசாமி : வயசு பொண்ணையும் அந்த அயோக்யக் கிழவரையும் தனிக்க உட்டுட்டு நீர் போறது சரியோ ?

துரை : பாதக மில்லே அவர்தான் அந்தப் பொண்ணே கட்டிக்கப் போற மாப்ளே.

சீனிவாசன் : அட பாவிங்களா !

ராமசாமி : அப்டியா சரிதான். போய்வாங்க செதம் பரத்தாரே.

துரைசாமி முதலியார் தலை குனிந்தபடி போய் விடுகிருர். ராமசாமியும் சீனிவாசனும் அறையில் வீரப்பக் கிழவர் செய்கையை ஜன்னல் வழியாகக் கவனிக்கிருர்கள் வெளிப் பக்கமிருந்து.



மதுரை தாமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்

**வீ**ரப்பக் கிழவருக்குக் குஷி அதிகரிக்கிறது. "வாக்குண்டாம் நல்ல மன முண்டாம்" என்று தொடங்கும் வெண்பாவை விருத்தம்போல் மெதுவாகப் பாடிக்கொண்டே விரல் நொடிப்பால் தாளம் போடுகிறார்.

**வீரப்ப:** கற்கண்டு, இப்பதான் என் மனசு குளுந்துது பனிக்கட்டிமாதிரி. ஏன் இண்ணு கேளு.

அவள் ஏன் இண்ணு கேட்கவில்லை.

**வீரப்ப:** ஏன் இண்ணு நாம்ப ரெண்டுபேரும் நான் நெனச்ச மாதிரி ஒரே ஊட்லே இருக்கோம் கற்கண்டு! ஒண்ணு கேளேன். கோகிலாம்பா இண்ணு ஒருத்தி, தங்கம் இண்ணு ஒருத்தி, முனியம்மா இண்ணு ஒருத்தி இப்படி பல பேரு ஐயையோ எனக்குக் கடிதாசிமேலே கடிதாசி எழுதறது. உம், எம்மனசு போவவே இல்தே அவங்ககிட்ட. ஒனக்கும் எனக்கும் பொருத்தம் இண்ணு இந்தத் தலையிலே எழுதியிருக்கும் போது எப்டி மனசு போவும். ஹி ஹி. இப்டி வா. ஒக்காரு!

**கற்கண்டு:** அக்றே இல்லிங்க.

வீரப்ப : கற்கண்டு இந்தா இந்தப் பணப்பையை அந்த டிரங்கில் வை.

அவள் வந்து பையை வாங்குகிருள். "இதென்னு ஓங் கன்னத்திலே கரி" என்று கூறி அவள் கன்னத்தைத் தொடுகிருர், அவள் பையைக் கொண்டுபோய் டிரங்கில் வைக்கிருள்.

வீரப்ப : (தனக்குள் உரத்த குரலில்)

அங்கே......மொத்தம் அறநூத்தி அஞ்சி ரூபா கொண்டாந்தேன். துணிமணி முப்பது ரூபா போச்சி. சில்லறைச் செலவு அம்பது ரூபாபோச்சி. இப்ப ஒரு ரூபா. அன்னுத்தி இரவத்தி நாலிரூபா......... கற்கண்டு எங்கே எடுத்துவா பையை.

அவள் பழையபடி எடுத்து வந்து கொடுக்கிருள்.

வீரப்ப : இதென்னு தலையிலே ஒட்டடை?

அவள் தலையைத் தொடுகிருர். உடனே பையை அவிழ்த்து ஒண்ணு ஒண்ணுக எண்ணிப் பார்த்து, "கற்கண்டு சரிதான் கொண்டுவை" என்று கூறுகிருர்.

கற்கண்டு பையை வாங்குகிருள். வீரப்பக் கிழவர் "மூணு பவுனுக்குக் காப்படிக்றதா இருந்தா" என்று கூறிக் கற்கண்டின் கையைப் பிடித்துக் "கை கனவாசியா இருக்குமோ" என்கிருர். அவள் பதமாகத்

திமிறுகிருள் என்று தோன்றவே கையை விட்டு விடுகிருர். கற்கண்டு பையை டிரங்கில் வைத்துவிட்டு மூலையிலேயே நிற்கிருள்.

வீரப்ப : எங்நேரம் நிப்பே ஒக்காரு. சொல்றேனே இப்டி வா! என்ன வெக்கம்? என் பக்கத் திலே வந்து ஒக்கார மாட்டே கற்கண்டு? என்னே வரச் சொல்றியா. வர்ரேன்.

கிழவர் கற்கண்டிடம் போகக் காலடி எடுத்து வைக்கிருர். ஆனல் கிழவரின் குடுமி பின்னல் இழுக் கப் படுகிறது. கிழவர் குடுமியை விடுவிக்க முயன்று கீழே விழுந்து மிகுந்த தொல்லையுடன் எழுந்து சன்ன லின் வெளியில் பார்க்கிருர்.

ராமசாமி கூறுகிருன் :

"பெரியவரே, இளம் பெண்ணின் வாழ்வைக் கெடுக்க வேண்டாம்." கிழவர் மலைத்து நிற்கிருர். கற்கண்டு நெஞ்சில் வியப்பும் மகிழ்ச்சியும், கண்ணில் துன்ப நடிப்பும்.

கற்கண்டு: நீங்க ரெண்டு பேரும் ஆரு. ஏன் அவரை இப்படித் துன்பப்படுத்தனும்?

சீனுவாச: தங்கச்சி ஒன் வாழ்வில் ஒனக்குப் பொறுப்பு இருக்க வாணுமா? தள்ளாத கெழவராச்சே!

கற்கண்டு: எப்படி சொல்றிங்க அவுரு தள்ளாத கெழவர் இண்ணு?

சீனுவாச: தலே மயிரு, மீசை வெள்ளேக் கோராப் பட்டு. அது கூடவா தெரியிலே?

கற்கண்டு: கெழவருக்கு இப்படியா இருக்கும் பல்லு?

சீனுவாச: ஐயையோ தங்கச்சி சொந்தப் பல்லல் லம்மா. சைஞுக்காரன் வேலே. அவுரு கண்ணே பாரம்மா, ஆழக் குழிதோண்டி அதிலே ஒரு முட்டையிட்ட மாதிரி. அவுரு செத்துப்போன மனிதர் கூட இல்லே யம்மா. செத்துப்போன மனிதரின் ஆவி இன்ருங்களே அதுவா இருக்குமோ என்னமோம்மா.

கற்கண்டு: கண்ணு தெரியிலே அவுருக்கு?

சீனுவாச: தெரியுதா? எங்கே தெரியுதம்மா? அவுரு உருவு நம்ப கண்ணுக்குத் தெரியுது. அதைக்கொண்டு நம்ப உருவு அவுருக்குத் தெரியறதா அர்த்தமா? வாசப்படிலே காலே வைக்க உத்தேசிக்கிருரு. ஆனு காலேத் தூக்கி ஆகாயத்தை எட்டி எட்டி ஒதைக்கிருரு.

கற்கண்டு: என்ஞெ எனக்குச் சிரிப்புக் காட்டப் பாக் றிங்களா?

சீனுவாச: சிரிக்காம இருக்கிற பந்தயத்லே ஒன்னே ஜயிக்க முடியாதம்மா.

வீரப்ப: போங்கடாப்பா, போக்கிரித்தனம் பண்ணுதிங்க.

சீனுவாச: ஆமாங் தாத்தா ஒரு சின்னப் பொண்ணெ இப்டி ஏமாத்றிங்களே, நீங்கபோக்றியா? நாங்க போக்றிங்களா? கெடுக்காதிங்க தாத்தா.

இராமசாமி சீனுவாசன் இருவரும்போகிறார்கள்.

துரைசாமி முதலியார் பலகாரங்களோடு வருகிறார்.

வீரப்ப: கற்கண்டு நீ போயி பலகாரம் சாப்பிடு. போ.

கற்கண்டு போகிறாள்.

வீரப்ப: ஏன் காணும்! கற்கண்டு ஏமேலே உசிரெ வெச்சிருக்றது இப்பத்தாங் கணக்குத் தெரிஞ்சிது. இந்தத் தெருவு ரொம்ப மோசம். இந்த ஊர்லே சிங்கார முதலி யாரிண்ணு ஒருத்தர் இருக்காரு. அவுரு நம்பள்வுரு. அவரைப் பிடிக்கணும். எல் லாம் சரயும். அதான் சரி. நான் அவரைப் பாத்துட்டு வர்ரேன். மொதல்லே செய்ய வேண்டிய வேலெ அது தான். போய் வர் ரேன்.

வீரப்ப: அப்போ நீ என்ன அவ்வளவு கெழவனு?

துரை: அதுக்குச் சொல்லலே.

வீரப்ப: பின்னே எதுக்குச் சொன்னே?

வீரப்பக் கிழவர் போகிருர். ஆனல் தாணில் முட்டிக் கொண்டு விழுந்து, நல்ல படியாக எழுந்து வலியை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் போய் விடுகிருர்.

வீரப்பக் கிழவர் போன பின்.

கற்கண்டு: எங்கே அப்பா போருரு ஒங்க மருமகப் புள்ளே?

துரை: அவருக்கு வயசு என்னமோ கொஞ்சந் தாம்மா.

கற்கண்டு: நல்ல [illegible] வயித்யம் செய்தா கண்ணு நல்லாய்டும். கடிக்காமல் இருந்தா பல்லு எங்கியும் பூடாது. பித்த நரை. அவருக்கு வயசு என்னப்பா இருக்கும்?

துரை: இந்தச் சித்திரை வந்தா நாப்பது.

கற்கண்டு: அடியாடி! சித்திரை வர இன்னும் எத்னி மாசம் இருக்கு?

துரை: இன்னும் மூணு மாசம் இருக்கு.

கற்கண்டு: அப்ப சித்திரை வரப்போறது நிச்சயம்? அது வரைக்கும் இவரு இருக்கப் போறது?

துரை: என்ன காயே ஏன் அப்டி சொல்றே?

கற்கண்டு: ஆயிசு கெட்டிதான் இண்ணு சொன்னிங்களே.

துரை: சாதகம் பாத்தேன் ஆயிசு கெட்டிதான்

கற்கண்டு: அப்டிண்ணு சரிதான்.

துரைசாமி முதலியார் பலகாரம் சாப்பிடுகிருர்.

## 3.

சிங்கார முதலியார் வீட்டுக் குறட்டில் தருமன் ஏகப்பட்ட சட்டதிட்டமாக உட்கார்ந்திருக்கிருன் விசிப் பலகைமேல். வீரப்பக்கிழவர், எதிரில் போய் நின்று விநயமாக "தாங்க தாஞ சிங்கார மொதிலி யாரு?" என்கிருர்.

தருமன்: ஆமாங்க என்ன சேதி? எந்த ஊரு?

வீர: நானு செதம்பரங்க. வீட்லே பொண்டுவ காலமாய்ட்டாங்க. நமக்கிண்ணு ஒருத்தி பொறுப்பா இருந்தா நல்லது. திரு ருண்ணு கொஞ்சம் வெந்நீரு வைச்சிக் குடுக்கணும். ஒருத்தி இருந்தா ... ஹி ஹி......

**தருமன் :** அது மாத்ரமா நமக்கே ஒண்ணுச்சி: மேலே உழுந்து அழுவ ஒருத்தி ஒணுமே. நல்ல பொணம் இண்ணு என்ன அர்த்தம்? தாலியைக் கைலே தூக்கிக் கினு பூவே எடுத்து விசிறி எறிஞ்சி அழுவ ஒரு கட்டுக் கழுத்தி இருக்கவாணுமா? வெக்கக்கேடு.

**வீர :** கலியாணம் நானு பண்ணிக்கப் படா திண்ணு நம்ப பசங்க எகுத்தாளி பண்ருனுங்க.

**தருமன் :** அவுனுவ ஆருண்ணேன்.

**வீர :** அதுக்கு மேலே ஒரு பொண்ணே பாத்தேனுங்க. கலியாணத்தே புதுச்சேரியிலே வைச்சி முடிச்சிப்புடலா மிண்ணு யோசனே. பொண்ணேயும் பொண்ணு தகப்பனுரு துரைசாமி முதலியாரையும் கையோட கூட்டி வந்துட்டேன். செட்டித் தெருவுலே வீடு பேசி எறங்கி இருக்கோம். அந்தத் தெருவுலே போக்டாப் பசங்க ஜாஸ்திங்க.

**தருமன் :** நீங்க என்ன மரவு?

**வீர :** மொதிலியார் தானுங்க.

**தருமன் :** நம்ப மரபு தான்.

**வீர :** அதனுலே தான் இங்கே........

தருமன் : சரிதான். கடைப்பட்டுட்டேன். அந்தத் தெருவி போக்றித் தெருவுதான். இருக் கட்டும், எல்லாம் ஏற்பாடு பண்றேன். எடுத்தேன் கவுத்தேனின்னு கலியாணத் தெ முடிச்சிப்புடணும். அப்டி வைச்சிக் இங்க பன்னிப் பன்னி ஏங் கேக்றிங்க. இது ஒரு மூதிரி ஊரு. பயப்படவேண் டியதில்லே. இங்கே, நம்ப எடத்லே ஆரும் ஒண்ணும் பண்ணிக்க முடியாது. இந்த ஒலகத்லியே நான் ஒரு ஜீவனுக்குத் தான் பயப்படுவேன். எங்க அண்ண னுக்கு, உள்ளதான் இருக்காரு. அவுரு ஒரு சிடுபுடுப் பேர்வழி, அவ்ளவு தான். என்னே எதிலியும் கவனிக்காதே இண்ணு வாரு. நீங்க இருக்கிங்க, ஒங்க சங்கதியைச் சொன்னிங்க. நான் கவனிக்கணுமே ஐயோ இண்ணு நெனேக்கிறேன். இதெல் லாம அவுருக்குப் புடிக்கவே புடிக்காது. தெரிஞ்சாலும ஒங்களியும் வோட்டுவாரு.

மத்தபடி பொண்ணுக்குச் சம்மதந் தானே ?

வீர : உசுருங்க.

தரு : பொண்ணு தகப்பனுருக்கு?

வீர : மணவறையிலே தம் மவளே ஏம் பக் கத்லே குந்தவச்சி கண்ணுலே பாத் துட்டாப்போதும் இண்ருரு அவுரு.

தரு: சொச்சோ! அப்டியா? இப்ப ஏங்கிட்ட என்ன எதிர்பாக்றிங்க பணந்தானே? சரி, எவ்வளவு தேவை? நூறு ரூபாய்லே எல்லாம் முடிச்சிப்புடலாமா?

வீர: ஐயையோ! சொன்னதே போதுங்க........

தரு: வெக்கப்படாதிங்க......

வீர: எனக்குக் காசுபுணம் வாணுங்க.

தரு: நம்ப மரபுர இருக்கிற விஷயத்லே புணமா பெரிசு?

வீர: இல்லிங்க ஏங்கிட்டப் பணம் இருக்கு. இல்லாட்டிப்போனு கேக்றேனுங்க.

தரு: நீங்க வெக்கப்படறதாத் தெரியுது.

வீர: வெக்கம் என்னுங்க.

தரு: நம்ப சாதி இருக்குதே ரொம்பக் கேவல நெலக்கு வந்துட்டுது. அதுனலே ஒருத்தருக்கு ஒருத்தர் நமக்குள்ளே உதவியா நடந்து கொள்ளணும், அதுக்காகத்தான் சொல்றேன். சரி, பொண்ணுக்கு ஏதாவது நகை நட்டு ஏற்பாடு பண்ணணுமே? அப்டி இல்லாட்டிப் போனு நல்லா இருக்காது.

வீர; நீங்களே செஞ்சிபுடுங்க அததுக்கு எப்டியோ அப்டி. ஒங்க கைலே குடுத்துடு

றேன். எல்லாத்தையும் நீங்கதானே முடிச்சிவைக்கணும்.

தரு: இப்ப எங்கே நகை செய்றது, வேண்டாம். நம்ப ஊட்லே இருந்து செட்டா அனுப்பி வைக்றேன். மெதுவாச் செய்துகினு அப்றம் குடுங்க நகையை, அவுசரமில்லே.

வீர: உங்க தயவுங்க.

**வீ**ரப்பக் கிழவர் தம்மிடமிருந்த ரூபாயில் சில்லறையை மாத்திரம் எடுத்துக்கொண்டு மொத்தமாக 500 ரூபாயைப் பையுடன் தருமன் எதிரில் வைக்கிறார்.

தரு: இங்கியா வைக்றிங்க, சரி. ஒப்புக்கொள்றேன். ஒரு விஷயமாத்ரம் சொல்றேன். அது என்னண்ணு இந்த ஊரிலே ஒருத்தன் மாத்ரம் இருக்கான் எனக்குவிரோதி. அவங்கிட்ட ஒரு முப்பது லக்ஷ ரூபா காசி கெடந்து கூத்தாடுது. பல காரியத்லே அவனைத் தலையெடுக்க வொட்டாதே அடிச்சேன். எதுக்குச் சொல்றேன் அவன் நான் கவனிக்ற காரியத்லே எதிரா வரக் கூடும். அந்தக் காலத்லே நீங்க பயந்து பூடக் கூடாது. காரியத்லே பின்னிடையக் கூடாது. அதுதான் நீங்க கவனிக்க வேண்டியது.

வீர: அதென்ன அப்டிச் சொல்றிங்க நம்ப மரபு! ஒரு போதும் இல்லிங்க. கிழிச்ச கோட்டெ தாண்டுவனு?

தரு: அதாங் கேட்டேன். சரி எல்லாம் நான் பாத்துக்றேன். நீங்க எறங்கி இருக்ற வூட்டுக்கு வாங்க போவலாம்.

வீர: நானே அவுங்களே அழைச்சிவரேனுங்க.

தரு: சரியல்ல. முன்னே போங்க இதோ வர் ரேன். நான் அங்கே தலையைக் காட்டிப் புட்டா எதிர்ப்பு மட்டா இருக்கும், அதுக் காக.

வீர: ஆமாங்க ஆமாங்க.

தரு: முன்னே போங்க.

வீரப்பக் கிழவர் முன்னே போகத் தருமன் பணப் பையை அடிமடியில் பத்திரப்படுத்திக் கொண்டு பின் தொடர்கிறன்.

## 4.

**வீ**ரப்பக் கிழவர் "கற்கண்டு" என்று அழைத் துக்கொண்டே உள்ளே நுழைகிறர். துரைசாமி முதலியாரும் கற்கண்டும் "ஏன்" என்று முன்வந்து நிற்கிறர்கள்.

வீர : ஆரு வர்ராரு பாத்திங்களா? மொதிலியா ரவாள்! நம்ப காரியம் இனிமே ஆராலும் தடைப்படாது. அந்தப் போக்கிறிப் பசங் களே இப்ப வரச்சொல்லுங்க. ஜோட் டால் அடிக்றேன்.

துரைசாமி முதலியாரும் கற்கண்டும் முதலியா ரைத் தரிசனம் செய்கிறார்கள். பாய் கொண்டுவந்து போடுகிறார்கள். ஓடுகிறார்கள், ஆடுகிறார்கள்.

வீர : இவுங்கதான் இந்தப் புச்சேரிப் பட்ட ணத்துக்கு ராசா மாதிரி, "சிங்கார முதலி யார் இண்ணு-கோவிச்சிக்காதிங்க-அழுத பிள்ளையும் வாயெ கெட்டியா மூடிக்கும் ஓடிப்போயி.

தருமன் : உம் நமக்கு மேலெல்லாம் ஓலகத்லே உண்டுங்க. ஓம்பேரென்னும்மா?

கற் : கற்கண்டு.

நாணிக் கொள்ளுகிறாள்.

தரு : அப்படியா கற்கண்டு இவரெ கல்யாணம் பண்ணிக் கொள்றதிலே அட்டிகிட்டி ஒண்ணுமில்லியே?

கற் : ஒங்களுக்குப் பிரியமிருந்தா எனக்குப் பிரியந்தானுங்க.

தரு: நீங்க தானுங்களா துரைசாமி முதலி யாரு? கலியாணத்தெ முடிச்சிப்புட வேண்டிது தானே?

துரை: சீக்கிரம் முடிச்சிப்புட்டா தேவலே.

தரு: ஒண்ணு பண்ணுங்க. வீரப்ப மொதலி யாரு மாப்பிள்ளையாவும் இருக்காரு இங்கே சிலருக்குப் புடிக்காதவராயும் இருக்காரு. முதலியார் தெருவுக்கு மேலண்டைப் பக்கத்தில் ஒரு வூடு காலியா இருக்குது இண்ணு கேள்விப் பட்டேன். முன்னே அதெப் போயி முடிச்சி வீரப்ப மொதலியாரு அதிலே இருந்துடணும். ஓடனே செய்யுங்க இதெ.

நாளைக்கி முகூர்த்த நாளு. முடிச்சுட வேண்டியதுதான். வேறே பேச்சில்லே.

துரை: நல்லதுங்க.

வீர: அதுக்குள்ள எப்டி?

தரு: எல்லாம் செட்டா நான் அனுப்பிடுறேன் அனுப்புறவன் நானில்ல? நாளெ வளத் தப்படாது

வீர: அப்டிண்ணு சரி. துரைசாமி மொதலி யாரே எழுந்திரும். நானும் வர்ரேன்.

தரு: நான் போகணும். ஆகவேண்டிய காரியம் அதிகம் இருக்குது.

தருமன் அவசரமாகச் சென்று வீதியின் முனை யில் நின்று இரு கிழங்களும் வெளியில் போகிறார் களா என்று கவனிக்கிறான். இருவரும் போகிறார்கள். கற்கண்டைத் தனியாகச் சந்திக்க, வீட்டை நோக்கி வருகிறான். வழியில் ராமசாமியும் சீனிவாசனும் நிற் கிறார்கள்.

ராமசாமி: சிங்கார முதலியாரா?

தரு: ஆம் என்ன சேதி?

ராம: வாங்களேன்.

தரு: இல்லே அவுசரமாப் போகணும்.

ராம: என்னுங்க சிங்கார முதலியாரே ஒரு சேதி கேட்டுப் போகப்படாதா?

தரு: ஏன்? என்ன சேதியப்பா?

தருமன் நிற்கிறான்.

ராம: அந்தக் கெழவனுக்கா அந்தச் சின்னப் பொண்ணெ கண்ணாலம் பண்ணி வைக் கப் போறிங்க?

தரு : அதுபத்தி ஓங்களுக்கு என்னு கவலே? உம்?

ராம : அப்படிங்களா? ஓங்களுக்கு என்னுங்க கவலெ? ஏதாவது தரவோ?

தரு : மரியாதையாப் பேசுங்கப்பா.

சீனு : மரியாதையாப் பேசு ராமசாமி.

தரு: நான் யார் தெரியுமல்ல?

சீனு : அவுரு யாருண்ணு தெரியுமல்ல ராமசாமி ஒனக்கு?

ராமசாமி சிரிக்கிருன் விழுந்து விழுந்து. சீனுவும் சிரிக்கிருன்.

ராம : ஏண்டா சிறுத்தொண்டப் பத்தன் கதை பாடுறவன் இண்ணு எங்களுக்குமாடா தெரியாது காமாட்டி?

தரு : தெரியுங்களா என்னே? தெரிஞ்சுதான் இருக்குதுங்க ஓங்களுக்கு. மன்னிக்க ணுங்க

சீனு : நீ அந்தப் பொண்ணெ கட்டிக்கொண்டாக் கூடச் சம்மதம் எங்களுக்கு. தள்ளாத கெழவனுக்கு வேண்டாம்.

தரு: ஓங்களுக்குத் திருப்தியா முடிச்சுப் புட ரேன் ஒரு மாதிரி. ஓங்க ஓதவி இருக்க ணும் சாமி.

ராம: சாமியாவுது பூதமாவுது. முயற்சி எடுத் துப் பாரு. எங்க ஓத்தாசை நிறைய இருக்கும் ஓனக்கு போறியா? அப்பப்ப வந்து சொல்லு.

தரு: சரிங்க.

தருமன் கற்கண்டின் எதிரில் போகிறுன்.

கற்: வாங்க.

தரு: அப்பா எங்கே?

கற்: ரெண்டு பேருந்தான் வூடு பாக்கப் போனுங்க.

தரு: கற்கண்டு, ஒன்னே தனியாக் கண்டு ஓ மனசை அறியணும் இண்ற எண்ணம். அந்தப் பெரியவரை நீ கட்டிக்கச் சம் மதிச்சதுக்கு என்னு காரணம்?

கற்: அதுவா. எங்கப்பா அவுருகிட்டே 300 ரூபா கடன்பட்டு இருக்காருங்க. அதுக் காக என்னெ தொந்தரவு செய்ருருங்க அந்தக் கெழவரெ கட்டிக்கச் சொல்லி.

தரு: நானு நெனைச்சேன்! அப்படிண்ணு ஒனக்குப் பிடிக்கலே?

கற்: ஆனு எங்கப்பா தனிக்கட்டே. அவுரு மனசெ திருப்திப் படுத்தனும் நானு

தரு: சவுகரியமா வேறு ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கறத்லே தடையில்லே.

கற்: ஒங்களாலேதான் முடியுங்க. அவுரும் கெழவரா இருக்கப் படாதுங்க.

தரு: நல்லாச் சொன்னே. துள்ளுகாளை. என் னுட்டம் இருப்பான் அசல்.

கற்: சரிங்க.

தரு: நல்ல சம்பாதனைக்காரன்.

கற்: சரி தானுங்க.

தரு: ஒங்கப்பா அந்தக் கெழவருக்குக் குடுக்க வேண்டிய 300 ரூபாயை அந்தப் புள்ளை யாண்டான் குடுத்துப்புடுவான்.

கற்: அதாங்க வேண்டிதுங்க.

தரு: இதெ மனசிலே வை. கட்டவுத்து உட்டு டாதே, காரியம் கெட்டுடும்.

கற்: உறுதிங்க.

தரு: உம், பெண் புத்தி பின் புத்தி இண்ணு வாங்க. நான் சொல்ற ஆளெ கண்ணாலம் பண்ணிக்கிறதாக் கைபோடு பாக்கலாம்.

கற்: (பரிதாபமாக) அவரெ ஒருதரம் கண் ணுலே பாத்தாத் தேவலீங்க.

தரு: என்னெ பாத்தா அவனெ பாக்கவேண்டி யதில்லே கற்கண்டு.

கற்: கெழவன் இல்லிங்களே? ஒங்களாட்டம் இருந்தாச் சரிதானுங்க.

தரு: சரி.

கற்: பெரிய அந்தஸ்துக்காரராய் இருக்கப்ப டாதுங்க.

தரு: அப்டியா? சரி. சாதாரண அந்தீசுதான்.

கற்: பிச்சை எடுக்கிறவரா யிருந்தாக் கூடம் பாதகம் இல்லிங்க கெழவராயில்லாமே கண்ணுக்குப் புடிச்சி இருந்தாப் போ துங்க. 300 ரூபா கெழவர்கிட்ட எறிஞ் சிப் புடணுங்க. கையை நீட்டுங்க.

(கையை நீட்டுகிருன் தருமன்)

கற்: ஐயோ நீங்க ஏழையா இருக்கப்படாதுங் களா?

தரு: ஏழையை நீ ஏன் விரும்புறே?

கற்: பணக்காரர் என்னெ ஏன் விரும்புறரு? விரும்புனலும் பின்னலே? ஏழையா யிருந்தா அப்டியில்லிங்க என் உடம்பு உண்டு. பாடுபடத் தைரியம் உண்டுங்க,

தரு: அப்டியா! ஐயோ! பொண்ணே கற்கண்டு நான் சொல்ற அந்தப் பையன் சனங்களுக்கு, சிறுத்தொண்டப் பத்தன் கதை சொல்லி நல்ல வெதமாப் பொழைக்கிறன். இனிமே அந்த வேலையை உட்டுடச் சொல்றேன். வேறே வேலெ பாத்துக் குடுக்கறேன். அவன் கையிலே 500 ரூபா ரொக்கம் வைச்சிருக்கான். என்ன சொல்றே?

கற்: அவுரு எப்டி இருப்பாருங்க?

தரு: என்னட்டமே

கற்: சத்தியமா அவுரெ கட்டிக்றேன். அவுரு சிறுத்தொண்டப்பத்தன் கதை சொல்ற வேலையை உடவேண்டிய தில்லிங்க. அவுரு கெழவரில்லியே?

தரு: சத்யமா இல்லே.

கற்: கண்ணுக்குப் புடிக்குங்களா?

தரு : என்னே ஒனக்குப் புடிக்குதா ?
கற் : புடிக்குதுங்களே.

தரு : என் போலவே இருப்பான் இண்றேனே. ஆனு நெலமை நான் சொன்னதுதான்

கற் : ஐயா என் தாய்மேலே ஆணை. அந்த நெலமை எனக்குச் சம்மதம்.

தரு : அப்டியானு கை போடு.

கற் : ஒரு தரம் அவரெ என் கண்ணுலே பாத்துட்டாப் போதும்.

தரு : நாந்தாங் கற்கண்டு.
கற் : ஆ! நீங்க பணக்கார ராச்சே.
தரு : ஆர் சொன்ன திண்ணேன்.

கற் : கெழவர் சொன்னுரே என்னமோ மொதிலியாரிண்ணு.

தரு : சிங்கார மொதிலியார் தாங்கதானு இண்ணுரு. ஆமாங்க இண்ணேன். நான் சிறுத்தொண்டப் பத்தன் கதை பாடறவன் தானே. மனசிலே போட்டுவை. சம்மதமா கற்கண்டு ?

தருமன் அவளெதிரில் கையை நீட்டுகிருன். அவள் கைபோட்டுக் கொடுத்ததோடு அந்தக் கைக்கு முத்தங் கொடுத்து,

"என் மைசூரு ராஜாவே! மாணிக்கக் கூஜாவே! என்னெ கண்ணாலம் பண்ணிக் கிறிங்களா?" என்கிருள்.

தரு: அடி என் செவ்வாழப் பழச்சீப்பே! சீமை எலந்தந் தோப்பே! நான் சொல்றபடி கேக்கணும் நீ.

கற்: தங்கத்து வார்ப்படமும் தாஞக வந்து நிண்ணு கோடு கிழிச்சுட்டா கொஞ் சோண்டு தாண்டுவஞ?

தரு: கற்கண்டு இப்ப எனக்கு என்ன மகிழ்ச்சி தெரியுமா?

கற்: எனக்கு மாத்ரம் கசக்கு திண்ணு நெனைக் றிங்களா? மாம்பழத்தட்டு வா இண்ணு கூப்பிட்டாப்லே, நஞ்ச பெலாச்சொளே நாக்லே வந்து குதிச்சாப்லே, தேஞன கொளத்லே, திட்டுண்ணு விழுந்தாப்லே, சோனெ மழையும் பவுனச சொரிஞ் சாப்லே, கொடலை மல்லிகைப்பூ கொட்டி முடிச்சாப்லே, வடம்புடிச்ச தேரு வாசல்லே வந்தாப்லே, அப்டியே துள் ளுது மகிழ்ச்சி தெரியுங்களா?

தரு: கற்கண்டு ஒன் அழவுலே நானு அட்டை யாட்டம் ஒட்டிக்கப்டாது இதுங்காட்டி

யும். இண்ணையவரைக்கும் தெபாரு, சிரிக்காதே; சுருட்டி மடக்கிகினு இங்கியே உழுந்துட வைக்காதே சொல்லிப் புட்டேன். ஓங்கண்லே காந்தமா இருக் இருக்கும்போடி.

கற் : ஏங்க அப்டி சிடுசிடுண்ணு இருக்கிங்க.

தரு : காரியம் பெரிசி கொறையும் முடிக்க வாணுமா ?

கற் : அதுக்குச் சொல்றிங்களா. பறிச்சித் திங்க ருப்லே சிரிச்ச மொகம் இப்டி மாறுச்சே என்னுடாப் பாண்ணு பாத்தேன்.

தரு : இப்ப ஒரே ஆபத்து.

கற் : என்ன ?

தரு : நாம்ப ரெண்டு பேரும் இப்பக் கொஞ்ச நேரம் பிரியணுமே.

கற் : ஆமாங்க என்ன பண்றதுங்க, ஓடனே வந்துடுங்க.

தரு : உசுரெ ஒரு கையாலே புடிச்சிக்சினு இரு என் பச்செ கிளியில்லே! கொஞ்சநேரம்.

கற் : வர்ரது நிச்சயமா இருந்தா நான் சாவாமே இருக்கறது நிச்சயந்தான்.

தரு : நிச்சயம் நூறு பங்கிலியும்.

கற் : அப்டிண்ணு துன்பமில்லே ஓ!

தரு : வரட்டுமா ?

கற் : போறிங்க ?

தரு : வந்துடுவாங்களே.

கற் : வந்துடு வாங்களா ?

தரு : உம். வர்ரேன்.

கற் : போறிங்க ?

தரு : ஆகவேண்டிது ரொம்ப இருக்குதே நாளை அதிகாலையிலே கலியாணமாச்சே.

கற் : கவனமாப் பாருங்க இங்கியே இருந்துட்டிங்களே.

தரு : போய் வர்ரேன்.

கற் : போறிங்க, ஒண்ணு கேக்க ஆசையாயிருக்கு.

தரு : என்ன அது ?

கற் : நீங்க திட்டாதிங்க.

தரு : நான, சே, சொல்லு சும்மா.

கற் : ஓங்க பேரு சொன்ன தருமமா இருக்கும்.

தரு : அதுதான் என்பேரு. நீதான் சொல்லிட்டியே தருமம் இண்ணு.

கற் : ஐயையோ பேரேச் சொல்லிப்புட்டேனே.

தரு : தெரியாதிருக்கும்போது ஆம்படையாம் பேரே சொன்ன குத்தமில்லே கற்கண்டு. நான் வர்ரேன் நாழி ஆவுது.

கற் : (வருத்தமாக) நான் கண்ணை மூடிக்கிறேன் சொல்லாமே பூடுங்க நீங்க.

கண்ணை மூடிக் கொள்ளுகிருள். தருமன் அவளைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே போய் விடுகிருன்.

கற் : பூட்டிங்களா? (உரத்தி)

தரு : பூட்டேன்.

கற் : (தூரமாகச் சென்றவனை) இப்படியே வர்ரிங்களா?

தரு : (உரத்தி) வர்ரேன்.

## 5

தருமன் சிங்கார முதலியார் வீட்டில் யோசனையோடு உட்கார்ந்திருக்கிருன். சின்னுன் சிறுத்தொண்டன் கதை பாடுவதற்கு முன் அது சம்பந்தமான வசனம் பேசுகிருன். இச்சமயம் புஷ்பரதனும் குறட்டில் வந்து நிற்கிருன்.

சின்னுன் : ஆத்தி மரத்தடியிலே சாமி குந்தியிருந்தாரா? அங்கே சிறுத்தொண்டப்பத்தனுகப் பட்டவன் அவுரு காலில் உழுந்தாஞ? உழுந்து அழைச்சாஞ? அதுக்குச் சாமி ஓங்க ஊட்டிலே என்ன கறிடா இண்ணு

கேட்டாரா? பூசினிக்கா பொடலங்கா அந்தக்கா இந்தக்கா இண்ணு சிறுத் தொண்டப் பத்தன் சொன்ஞ? அதுக் குச் சொல்ருரு சாமி.

"பூசினிக்கா ஐயரொட தொப்பை
யல்லோ பத்தா
அது தொப்பையல்லோ பத்தா
பூசனிக்காக் கறி எனக்கு
வேண்டா மென்ருர்."

கேட்பவர் I ஓகோ சிவனுக்குத் தொப்பை யாட்டம் பூசினிக்கா இருக்குது அதுக்காக, அது வாணும் திண்ணுப் பாவம் இண்ருரா?

கேட் II சொல்றவரு ஆரு?

கேட் I சொல்றவரும் அவுருதான்.

கேட் II தெரு விளயாடலு இ தெல்லாம்.

சின்னுன் : கத்திரிக்காய் ஐய ரொட

பூசை மணியல்லோ பத்தா
பூசை மணியல்லோ பத்தா
கத்திரிக்காக் கறி எனக்கு வேண்டாம்
என்ருர்.

முருங்கக்காய் ஐய ரொட
விபூதி யல்லோ பத்தா
விபூதி யல்லோ பத்தா

முருங்கக்காக் கறி எனக்கு
வேண்டாம் என்றார்.

பாவக்கா ஐய ரோட
குண்டல மல்லோ பத்தா
குண்டல மல்லோ பத்தா
பாவக்காய்க் கறி எனக்கு
வேண்டாம் என்றார்.

இந்தக் கறிகள் எல்லாம்
எனக்கு வேண்டாம் பத்தா
எனக்கு வேண்டாம் பத்தா
எடுத் துரைப்பேன் அதைக்
கேளும் பத்தா.

மனிதக் கறி எனக்கு
வேணுமடா பத்தா
வேணுமடா பத்தா
பிள்ளைக் கறி எனக்கு
வேணுமடா.

புஷ்பரதன் ஆச்சரியத்தோடு,
"ஐயையோ பிள்ளையையா சமைக்கறது."

தரு: உம். ஆமாம். ஒன்னுட்டம் புள்ளையை.

சின்: பள்ளிக் கூடப் பிள்ளையாய்
இருக்க வேணும் பத்தா
இருக்க வேணும் பத்தா

ஒரு தாய்க்கொரு மகனுய் இருக்கணுண்டா.
தாயார் மடியில் அமுக்கிப்
புடிக்கணுண்டா பத்தா
புடிக்கணுண்டா பத்தா
தகப்பனுர் கத்தியாலே
அறுக்கணுண்டா.

புஷ்ப: ஐயையோ அப்படியே செய்ஞ்சாங்களா?

தரு: ஓ அதே மாதிரிப் புள்ளெயெ அலற அலற அறுத்து ஆக்கினுங்க. போட்டாங்க.

புஷ்பரதன் எண்ணம் குழம்புகிறது. விழிக்கிருன். மெதுவாக உள்ளே போய்விடுகிருன்.

வேலே இழந்த காவற்காரக் குப்பன் வருகிருன் வெகு சோர்வுடன்.

தரு: குப்பர் வருகிருரோ குப்பர்.

குப்பன்: என் கஞ்சியைக் கெடுத்துப்புட்டியே என் அடிவயிற்றில் அடிச்சிப் புட்டியே? ஒன்னேதான் கேட்டுக்கலாம் இண்ணு வந்தேன். ஒனக்கு வேற பொழப்பு உண்டு. எனக்கு அப்படி இல்லே. நீ இப்ப நெனச்சா என் துன்பத்தை நீக்கிட முடியும். நான் புள்ளெ குட்டிக் காரன். என்ன சொல்றே?

தரு: வந்தியா வழிக்கு? ஒன் முறுக்கு திலுப்பு எல்லாம் ஏங்கிட்டே காட்ட மாட்டியே?



4

குப்ப: ஊ ஹூம்.

தரு: சரி ஒரு பக்கம் போயிரு. எசமான் வெளி யிலே வந்து நிப்பாரு. ஓடியாந்து காலிலே உழு. கெஞ்சு. அழுவு. நானும் ஒனக்கு சிபாரிசு செய்றேன். தெரியுமா?

குப்ப: தெரியும்.

தரு: தெரியுங்க இண்ணுடா.

குப்ப: தெரியுங்க.

தரு: இனி ஒரு தடவை என்னைப்பத்தி சாக்ர தையா இருப்பியா?

குப்ப: சரி.

தரு: சரிங்க இண்ணுடா.

குப்ப: சரிங்க.

தரு: போ.

குப்பன் சந்து முனையில் மறைவாக நிற்கிறான்.

வீரப்பக்கிழவர் தருமனை நோக்கி வருவதைத் தருமன் பார்த்து விடுகிறான். தருமனுக்கு ஓர் கற்பனை உதிக்கிறது. வீட்டின் வாசற்படி யுட்புறமாக மறைவில் கணக்கப்பிள்ளை யிருப்பது போலவும் தருமன் அந்தக் கணக்கப்பிள்ளையோடு பேசுவது போலவும் பிறர் பாவிக்கும்படி பேசுகிறான்.

" கணக்கப்பிள்ளை வேலை பார்ப்பது இப்டியாண் ணேன். மார்வாடி கைமாத்தாக-சீட்டா நாட்டா பதி

மூவாயிர ரூபா வாங்கிப்போனுன். அதெ கேக்க மறந் துடலாமா? ஒண்ணு காட்டுக் குத்தகை வகையில் வேலுக்கவுண்டர் கணக்கு ஐயாயிரம் தவுசல் படுகி றது. அதெ ஒடனே எடுத்தெழுதி 'இதோ இருக்கு தடா மடயா கணக்கு' இண்ணு அவன் மூஞ்சிலே எறி யறதில்லே? என்ன? நீங்க சொல்லலையா? எல்லாத் தையுமா நான் சொல்லணும்? நல்லா இருக்குது. (இதற்குள் வீரப்ப முதலியார் சமீபத்தில் வந்துவிடு கிறார்.) சரி போய் வேலையே பாரும். வாங்க முதலி யாரே.

வீர : வீடு அமத்திச் சமையலுக்கும் ஏற்பாடு பண்ணிட்டேனுங்க.

தரு : பேஷ் நல்ல வேலை செய்திங்க, புஷ்பப் பல்லக்குக்குச் சொல்லிப்புட்டேன். பல் லக்கு ஒங்க ஊட்டுக்கு வரும். அங்கேயே ஜோடிப்பு நடக்கும். அந்த நேரத்துக்கு முஸ்திப்பா பொண்ணு வூட்டுக்கு அனுப் பவேண்டிது. ஒடனே பொண்ணு வூட்லே இருந்து ஊர்கோலமாக் கெளம்பி முத்தால்பேட்டைச் சத்திரத்துக்குப் போ றது. விடியக்காலே முகூர்த்தம். வேண் டிய ஆள்கள் சாமான்கள் அல்லாம் சித்த மாயிட்டுது. ஜவுளி தினுசு மாத்ரந்தான் எடுக்கணும். கேட்டிங்களா சேதியை? அந்தப் பசங்க ரெண்டு பேரும் என்

விரோதி இருக்கான் இண்ணேனே அவன் ஆட்கள்தான். பயம் ஒண்ணுமில்லே. இருந்தாலும் நாம்ப முன்னேற்பாடா இருக்கணும் பாருங்க? நீங்க மாத்ரம் வெளியிலே வரவாணும். அந்த நேரத்லே நானுவந்து கூப்பிடுவேன்.

வீர : சரிதானுங்க, அப்டியே. நான் போகட்டுமா? அதென்னமோ அல்லாம் ஓங்க பொறுப்பு.

தரு : அதான் பாரத்தெ என் தலையிலே போட்டுட்டிங்களே. சரி போய்வாங்க. வெளியிலே மாத்ரம் நீங்க வரவேண்டாம்.

வீர : அதென்னுங்க அதை அவ்வளவு அழுத்தமா சொல்றிங்க, நெலமெ அவ்வள்வு மோசமாவா இருக்குது?

தரு : இல்லே, வேறே ஒருத்தனுக்குக் கற்கண்டைத் தூக்கிப் போயி கலியாணம் பண்ணிப் புடறதுண்ணு எதிரியின் யோசனே.

வீர : அந்தப் பசங்க அப்பவே அதான்களே சொன்னுனுங்க.

தரு : பாத்திங்களா.

இச்சமயத்தில் வெளியில் போயிருந்த சிங்கார முதலியார் வந்து விடுகிருர். தருமன் விழிக்கிருன். முன்பு தருமன் எசமானிடம் சொல்லிக்கொள்ளாமல் வெளியிற் போனது பற்றி எசமானுக்குக் கோபம் இருக்கக் கூடும். இப்போது எசமான் பேசப்போகும் பேச்சுகளால் தருமன் கேவலம் காவற்காரன் என்ற உண்மை வீரப்ப முதலியாருக்குத் தெரிந்து விட்டால் ஆபத்து. வீரப்ப முதலியாரை, நீங்கள் சீக்கிரம் போய் விடுங்கள், என்று சொல்லி அனுப்புவதும் சாத்திய மில்லை. அவர் குறட்டை விட்டு இறங்கவே கால் மணி நேரம் செல்லும். ஆயினும் தருமனுக்கு மின்னல் போல் ஒரு யோசனை நெஞ்சில் தோன்றிற்று. எசமான் தன்னை நோக்கி வாய் திறக்கு முன் தானே அவரை நோக்கி,

தரு :— நாம் பழைய வேலைக் காரனை நீக்கிய தில் அவன் அதிகத் தொந்தரவு படுவதாகத்தான் தோணுது.

சிங் : சரி நீ முன்னே எங்கே போனே?

தரு : இங்கில்லே மெய்தான்.

சிங் : எதற்காக ஒன்னை வைத்தது? வெளியி லிருந்து வருகிறவங்களை விசாரித்து உள்ளே விட. உள்ளே கூட்பிட்ட கொரலுக்கு ஏண்ணு கேக்க. நீ பூட்டா என்ன பண்றது?

தரு : அது முட்டாள் தன மில்லிங்களா?

சிங் : பிச்சை எடுத்த நாயே ஒன்னே கொண்டாந்து சேத்ததுக்கா?

தரு : அக்றம மில்லிங்களா?

சிங் : அவுசரமிருந்தா சொல்லிட்டுப்போறது?

தரு : ஓ நல்லா.

அயோக்கியப் பையா.

கோபமாகச் சிங்கார முதலியார் வீட்டுக்குள் நுழைந்தவுடனே அவர் வார்த்தையைத் தொடர்ந்தாற்போல் தருமனும், "ஈனப்பையன்" என்று வேறொருவனைக் கூறியதுபோல் கூறிவிட்டு, வீரப்ப முதலியாரை நோக்கி,

எவனெ வைச்சாலும் அயோக்யத்தனந் தான் பண்றானுவ, பாருங்க அண்ணனுக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கலே. ஒருத்தனேயும் அண்ணன் இப்படியெல்லாந் திட்ட மாட்டாரு. அந்தப் பையன் அப்டி நடந்து கொண்டானுங்க. நீக்கிவிட்டு வேறெ ஆளெ வைச்சுடனும் என்று கூறி, சிங்கார முதலியார் பேசிய அனைத்தும் தன்னையல்ல என்று வீரப்பக்கிழவர் நம்பும்படி செய்து விடுகிறான்.

வீர : ஓகோ வேறே ஆளப்பத்தி கோவிச்சிகிறாரோ சரிதான். தங்கள் அண்ணர் கொஞ்சம் கோவக்கார்தான் போலிருக்கு.

தரு : இந்த ஒலகத்லே ஏங்கிட்டதான் மரியாதை! போங்களேன்.

வீரப்பக்கிழவர் விடைபெற்றுக்கொண்டு போய் விடுகிறார். தருமனும் ஆபத்தில் தப்பினோம் என்று மூச்சு விடுகிறான்.

சிறிதுநேரம் சென்று வழக்கம்போல் சிங்கார முதலியார் உடைகளைக் களைந்து, காவித்துண்டு, வெள்ளை வேட்டி, கையில் விசிறியுடன் வெளியில் வருகிறார்.

சந்து முனையில் காத்திருந்த (பழைய காவல்) குப்பன் ஓடிவந்து காலில் விழுகிறான். அழுகிறான்.

குப்ப : வேலையை விட்டு நீக்கிய நாளிலிருந்து பட்டிணிங்க. புள்ளெகுட்டிக்காரனுங்க, நீங்கதானுங்க காப்பாத்தணும்.

சிங் : ஒன்னை அனுப்பிப்புட்டு அந்தப் பையனே வைச்சேன். இவனும் அப்படித்தான் செய்றான்.

தரு : எனக்குப் பொழப்பு இருக்குதுங்க. என் வேலையெ பழயபடி இவனுக்கே கொடுத்திடுங்க.

சிங் : சரி அப்ப ஒப்புக்கொள்ளு குப்பா.

முதலியார் உள்ளே போனதும் தருமன் தனது வெள்ளை வேட்டி, காவித்துண்டு, விசிறி இவைகளைக் குப்பனிடம் கொடுத்துவிட்டுப் போய்விடுகிறான். குப்பன் அந்த உடைகளை உடுத்திக்கொண்டு விசிறியையும் கையில் பிடித்த வண்ணம் விசிப்பலகையை அடைகிறான்.

## 6

துரைசாமி முதலியாரும் கற்கண்டும் தருமன் அனுப்பிய கூறைப் புடவை பன்னிரண்டாறு சில்லரை நகைகள் ரவிக்கை முதலியவைகளைப் பற்றிப் பேசிப் புகழ்ந்திருக்கிறார்கள்.

அச்சமயம் சின்னான் தன்னுடன் வந்த பெண் பிள்ளையைக் காட்டி "மொதலியார் வீட்டம்மா" என்கிறான். துரைசாமி முதலியார் திடுக்கிட்டெழுந்து சிறிது வீட்டின் வெளிப்புறத்தில் ஒதுங்கி விடுகிறார். வந்த பெண்பிள்ளை ஓர் ஓரமாகச் சென்று கற்கண்டை அழைத்துக் கொண்டு அறை வீட்டை அடைகிறாள். அந்த அம்மாவுக்கும் கற்கண்டுக்கும் நடக்கும் பேச்சுக்களை ஆண்பிள்ளையாகிய துரைசாமி முதலியார் எப்படிச் சமீபத்தில் இருந்து கேட்க முடியும்?

கற்கண்டு தன் தகப்பனிடம் வந்து,

"அப்பா ஒங்களெ முத்தால் பேட்டை சத்ரத்துக்கு, சின்னான் கூடப் போயி ஆக

வேண்டியதெப் பார்க்கச் சொன்னுங்க அம்மா. நகை யெல்லாங் கொண்டாந்திருக்காங்க. மத்தவுங்களும் இப்ப வரப் போருங்களாம். நீங்க இருக்றிங்க இண்ணு அம்மா வெக்கப் படுருங்க" என்கிருள்.

துரை : சரிதான். சின்ஞன் வரியா?

(இருவரும் போய் விடுகிருர்கள்.)

கற்கண் : (அம்மாவை நோக்கிச் சிரித்துக்கொண்டு) ஆவ வேண்டிதென்ற மேற்கொண்டு?

அம்மா : (அம்மாவாக வந்த தருமன் — "நீயும்) நானுந்தான் கற்கண்டு"

கற் : ஏங்க இம்மா நேரம்? கோவில்லே பெருமாளையாவது பாத்த கண்ணு மறந்து போவும், ஓங்களெக் கண்டதிலே இருந்து இந்த பாழாப்போன மனதும் கண்ணும் மறக்குதா ஓங்களே? கலியாணம் நடந்துடுமா?

தரு : நாளைக்கு இந்நேரம் எனக்கு நீ, ஒனக்கு நானு; அப்பட்டம் அலுவாத்துண்டு தானே!

கற் : அள்ளி அள்ளி முழுங்கவேண்டிதுதானே? ஐயையோ இந்த ராத்திரி போயி? அப்ரம் ஒரு ராத்திரி வரணுமே?

தரு : ஏன் அப்டி? இதோ இந்த ராத்ரி போச்சோ போவுலியோ கலியாணந் தீந்துது. ஆடேன்! பாடேன்! என் முதுவு மேலே ஏறிக்கேன்! அல்லாட்டி மாட்டு வண்டி கட்டிக்கேன்! ஏறிக்கேன் என்னோடே! உடேன் சவாரி ஆலஞ்சாலேக் காத்லே! வாயேன் திரும்பி! சாப்பிடேன் என்னோடே ஒரே எலேயிலே!

கற் : அப்றம்?

தரு : புட்டுக்கேன் லட்டே!

கற் : அப்றம்?

தரு : தொட்டுக்கேன் நெய்யே!

கற் : அப்றம்?

தரு : கொட்டிக்கேன் வாயிலே!

கற் : அப்புறம்?

தரு : தட்டிக்கேன் கையை!

கற் : அப்புறம்?

தரு : நெட்டிக்கேன் பாலே!

கற் : அப்றம்?

தரு : வெட்டிக்கேன் டாக்கே!

கற் : அப்றம்?

தரு : தூக்கேன் ஏலக்கா, கிராம்பு, ஜாதிக்கா ஜாதிபத்ரி, தோக்கேன் கம கம கம கமண்ணு. ஆரு ஒன்னே கேக்றவுங்க இண்ணேன்.

கற் : அப்படியா சேதி ஐயையோ.

கற்கண்டு தருமன் மேல் விழுந்து சிரிக்கிறாள்.

கற் : இப்ப எங்கப்பா திரும்பி வந்துட்டா?

தரு : யாரு? ஏன் வர்ராரு, சின்னான் கொடுக்ற மருந்திலே முத்தால் பேட்டைச் சத்ரத்லே மூலையிலே முட்டை இடற கோழிதான் ஒங்கப்பா. ஆறு கற்கண்டு! நானு அவசரமாப் போவுணும். ஆவ வேண்டிய காரியத்தெ பாக்கவாணும்? என் கண்ணில்லே எனக்கு உத்தரவு குடு.

கற் : போறிங்க?

தரு : ஆமாம்.

கற் : செய்ங்க.

அவள் ஆசையோடு பார்க்கிறாள் அவன் போவதை.

# 7

ஆயாசமான குரலில், தருமன் துரைசாமி முதலியாரிடம் பேசுகிருன்.

தரு: அந்தப் பசங்க ரொம்ப அயோக்கியத் தனத்லே ஆரம்பிச்சுட்டானுவ.

துரை: என்ன என்னுங்க ?

தரு: நானு என்ன சொல்றது போங்க.

துரை: அப்டிங்களா ?

தரு: வீரப்பக் கிழவருக்குத் தவிர வேறு யாருக் காவதுகற்கண்டைக்கலியாணம்பண்ணிப் புடக் கூடாதா ?

துரை: முடியவே முடியாதுங்க, அப்படி நான் தவறி நடந்துப் புட்டு உசுரோட இருக்க மாட்டேன்.

தரு: அதிகக் கஷ்டமிருக்குது, கிழவருக்கு முடிக்ற விஷயத்திலே.

துரை: உசுரே போகட்டுங்க நான் அவருக்கே குடுத்தாகணும்.

தரு: பொண்ணுக்குக் கெழவர் விஷயத்லே இஷ்டம் இல்லாட்டி ?

துரை: கற்கண்டுக்கா ?

தரு: உம்.

துரை : இந்தச் சத்ரத்துக் கெணத்லே உழுந்து ஒழியறது, அவ்வளவு தானுங்க.

தரு : பாவம் ஒங்க சபதம் நெறவேறணும். பாப்பம், கெழவரு வயித்தாலே போவு திண்ணுரு.

துரை : எப்போ ?

தரு : சாயந்திரம், டாக்டரை அழைச்சி உட்டுட்டுத் தானே நான் அந்தண்டை போனேன். சரி நான் போய்வர்ரேன். ஒங்குளுக்கு வண்டியும் தக்க ஆளும் அனுப்றேன். அல்லாட்டி நான் வர்ரேன். அது குறுக்க நீங்க வெளியிலே வரவாணும். கலியாணத்தெ பொண்ணு வூட்லே செட்டித் தெருவுலியேதான் வச்சிக்க வேண்டியதா வரும்போல இருக்குது. இருங்க.

துரை : ஒங்களுக்கு ரொம்ப செரமம்.

தரு : இருக்கட்டுங்க, அதெப்பாத்தா முடியுது. களா ? வர்ரேன்.

அவசரமாகப் போகிருன் தருமன்; சிறிதுதூரம் போனவுடன் சின்னுன் எதிரில் வருகிருன்.

சின்னன் : துரைசாமி மொதலியாரை இங்கே உட்டுட்டு அங்கே வந்தேன். ஒங்களேகாணும். ஓடியாரேன்.

தரு : சரி என்ன மணி?

சின் : பத்துக்கு மேலாச்சி.

தரு : ஒன்னு பண்ணு. நான் நேரே வீரப்பக் கெழவன் கிட்ட ஒக்காந்து பேசியிருப்பேன். அந்தச்சமயம், அந்தத் தெருவுலே கடாப் படாண்ணு கல்லுவந்து உழணும்.

சின் : எங்கே உழணும்?

தரு : தெருவுலே இருக்ற பல ஊட்டு மேலியும். என்ன சொல்றே?

சின் : சரி அடுத்த தெருவுலே இருந்து, பத்து மலைப் பிஞ்சியே அனுப்றேன். அப்றம் என்ன?

தரு : அதான்! போ!

சின்னன் ஓடுகிறான்.

## 8

தருமன் வீரப்பமுதலியார் வீட்டைத் தட்டுகிறான்.

தரு : நாந்தான் கதவைத் திறங்க.

வீர : நாந்தான் இன்னு? ஆரு?

தரு : நாந்தான் சிங்கார முதலியார்.

வீர : வாங்க வாங்க.

கதவு திறக்கப் படுகிறது.

வீர : நீங்க சொன்னதிலிருந்து கதவைப்பூட்டியே வச்சுடறது.

தரு : அதுதான் சரி! விஷயம் அதிக மொம்மரமா பூட்டுதுங்க.

வீர : என்ன ?

தரு : ஒங்களே தூக்கிப் போய்டறது. அல்லாட்டி அடிச்சி புடறது. பொண்ணே தூக்கிம் போயி, வேறு ஆளுக்குக் கட்டிப் புடறது.

வீர : அதானுங்க அவுங்க தீர்மானம்.

தரு : அடியாட்களெ ஏற்பாடு பண்ணி புட்டானுவ.

வீர : ஐயையோ என்ன பண்றதுங்க ?

தரு : தக்க ஏற்பாடு பண்ணுமலா இருப்பேன் ? பயப்படவேண்டிய அவுசியம் இல்லியே?

வீர : ஒங்க தயவுங்க, என்னெ காப்பாத்தி வூட்டுக்கு அனுப்றது ஒங்க பொறுப்புங்க.

தரு : அவனுவ இந்தத் தெருவுக்கு வரப் போறதா கேழ்வி, நானும் தக்க ஏற்பாடு

பண்ணி யிருக்கேன். உயிருக்குப் பயந்தா என்ன ஆவும்?

வீர : என்னியா அப்டி துணியணும் இண்றிங்க?

தரு : உம் என்னெ சொல்றேன்.

கதவை யாரோ தட்டுகிறார்கள்! அதைக் கேட்ட வீரப்ப முதலியார் நடுங்குகிறார். தருமனுக்குத் தெரியும் இனனார் என்று, அதனால் தருமன் வெகு தைரியமாக, "ஆர் அங்கே" என்று அதட்டிவிட்டுக் கதவைத் திறக்க எழுந்திருக்கிறான். வீரப்ப முதலியார்,

"ஐயையோ தெறக்காதிங்க"

என்று தடுக்கிறார். தருமன் திமிறிக்கொண்டு போய்க் கதவைத் திறந்து, "யார்" என்கிறான்.

"பல்லக்குங்க"

என்று பதில் கிடைக்கிறது.

தரு : பல்லக்கா? அப்டிதான் வையுங்க! கொஞ்சம் கட்டை முட்டை தர்ரேன். அதெ போட்டு ஊட்டு எதிரெ கொளுத்துங்க. சாவு வீடாட்டம் பாக்றவங்க நெனைக்கணும்; தெரியுமா?

ஆராவது கேட்டா. செதம்பரத்துப்

பெரியவுரு காலராவிலே செத்துப் புட்டாரு அவுருக்குக் காலேயிலே கல்லாணம் ஆக இருந்துது' இண்ணு சொல்லுங்க.

ஆள் : சரிங்க.

தருமன் கட்டை முட்டைகளே எடுக்கப்போகிருன். இவைகளைக் கேட்டிருந்த வீரப்ப முதலியார்.

"இது என்னுங்க கோரமா இருக்கு" என்று இரக்கமாகக் கேட்கிருர்.

தரு : நீங்க கண்டு புடிக்க மாட்டேண்றிங்களே நான் போற மாதிரியே.

இதற்குள் தெருவிலிருந்து சத்தம் கேட்கிறது.

"கல்லு! கல்லு! எவன் அவன். உடாதே.

தரு : வந்துட்டானுவ.

வீர : இங்கே வரக்கூடுமோ?

தரு : வரட்டுமே! வந்தா. கெழவர் செத்து புட்டாருண்ணு பல்லக்கு தூக்ற ஆள் சொல்லப்போருன். ஆத்ரமாவந்தவனுங்க "ஐயையோ" இண்ணு மனசி எரங்கி திலும்பிப் பூடப் போருனுவ. அவளவு தானே.

வீர : நல்ல யோசனை தான்.

பிணம் இருந்தால் அந்த வீட்டின் எதிரில் தீ மூட்டுவது என்ற வழக்கப்படி தீ எரிகிறது. பல்லக்கும் தயாராக வைக்கப் பட்டிருக்கிறது.

தரு . நீங்க உள்ளியே இருங்க; கதவெ சாத்திகினு. இதோ வந்துடுறேன் !

வீர : ஏன் போறிங்க ?

தரு : அட ! போம் போதே மூதேவியாட்டம் ஒண்ணும் கேக்காதிங்க !

வீர : சரிங்க.

சற்று நேரத்திற் கெல்லாம் தருமன் தன் முகம் மறைய முக்காடிட்டுக்கொண்டு துரைசாமி முதலியார் சகிதம் பல்லக்கு வைத்திருக்கும் தெருவை அடைகிறான்.

அந்த வீதி முனையில் தற்செயலாகப் பல்லக்கையும், தீ எரிவதையும் பார்த்தவன் போல நடித்து.

தரு : நில்லுங்க அங்கே என்னு ?

துரை : தெரியிலிங்களே

தரு : அதுதானே வீரப்ப முதலியார் இருக்கிற ஊடு.

துரை : தெரியிலிங்களே. நெருப்பு எரியறது மாத்திரம் தெரியுது எனக்கு.

தரு : என்னுங்க அது ! ஐயையோ.

துரை : என்னுங்க ?

தரு : நெருப்புத் தெரியுதே ! ஐயையோ பல்லக்குத் தெரியுதே.

துரை : ஐயையோ போயி பாப்பமே அடடா.

இருவரும் வீரப்ப முதலியார் வீட்டின் எதிரில் வந்து நிற்கிறார்கள். தருமன் ஒருபுறமாக நின்று கொண்டு துரைசாமி முலியாரைநோக்கி,

"அந்த ஆளை மெதுவாக என்ன
இங்கேண்ணு விசாரியுங்க"
என்கிறான்.

துரைசாமி முதலியார் போய்க்கேட்கிறார்.
"என்ன இங்கே ?"

ஆள் : நாளைக்கு கல்லாணம் செய்துக்க இருந்தாருங்க அந்தச்செதம்பரத்து பெரியவரு. காலராவுலே செத்துப் புட்டாருங்க.

தருமனும் துரைசாமி முதலியாரும் பேசிக் கொண்டே திரும்புகிறார்கள்.

துரை. நாங்க செதம்பரத்லே இருந்து வந்தோம். அவுருக்கு இப்டி ஆச்சி, எனக்கு அவச் சொல்லு ஏற்பட்டுப்போச்சி.
அழுகிறார்.

தரு: மனசே தெடப்படுத்துங்க. எனக்குச்சாய்ந் திரமே சந்தேகம் ஏற்பட்டுப் போச்சி. அதோட்டுத் தான் கேட்டேன் ஒங்களே; வேறே ஒருத்தருக்குக் கட்டிக் குடுக்க ஏற்பாடு பண்ணலாமா இண்ணு. இப்ப என்ரு. கலியாணத்துக்கா ஏகப்பட்ட செலவு ஆயிபோச்சி. குறிச்ச நேரத்லே கலியாணத்தே முடிக்காட்டிப் போரு எனக்கும் கெட்ட பேரு.

துரை: அப்டிதான் செய்யுங்க! மாப்பிள்ளை?

தரு: இருக்கான்! நல்ல பையன்!

துரை: நல்லா இருப்பாரு? கண்ணுக்குப் புடிக் குமா பொண்ணுக்கு?

தரு: என்னுட்டமே இருப்பான்! என்னெ பாத்தா அவனெ பாக்கவே வேண்டி தில்லே. அநேகம் பேரு நான் தாண்ணு நெனேச்சி அவங்கிட்ட பேசுவாங்க. முந்தாநேத்து தபால்காரன் அவனேப் பாத்தான். கும்பிடு போட்டுட்டு என் தபாலெ அவங்கிட்டெ குடுத்துட்டான். அப்டி

துரை: அவனெ சம்மதிக்க வைக்கணுமே.

தரு: இப்ப ஆக வேண்டிய வேலே அதுதான்! நீங்க முத்தால் பேட்டையிலியே சத்ரத்லே இருங்க. ஓங்களெ கூட, அந்தப் போக்கிரிப் பசங்க தேடுவதாகக் கேள்வி. நான் எல்லாம் ஏற்பாடு பண்ணிப்புட்டு ஆளெ அனுப்புறேன் வாங்க. அது குறுக்க வராதிங்க. உம்.

துரை: நல்லதுங்க.

## 9

கற்கண்டும் தருமனும் மணவறையில் உட்கார்ந்திருக்கிருர்கள். இன்னும் தாலி கட்டவில்லே. ராமசாமியும் சீனிவாசனும் ஆக வேண்டிய காரியத்தைப் பொறுப்புடன் கவனிக்கிருர்கள்.

தாலிகட்டப் போகும் சமயம். துரைசாமி முதலியார் மணவீட்டில் நுழைகிருர், மாப்பிள்ளேயைப் பார்க்கிருர். அவர் முகம் வேறுபடுகிறது. மகாபெரிய மனிதராகிய சிங்காரமுதலியார்தான் மாப்பிள்ளேயா? அப்படியானுல் அவர் சுய காரியத்திற்காகப் பல சூழ்ச்சி செய்தாரா என்பன போன்ற சந்தேகம் அவருக்குத் தோன்றுகின்றன. அதனுல் துரைசாமி முதலியார்,

"எல்லாம் சூழ்ச்சியா இருக்குது என்று கூவுகிறார்.

அதேசமயம் சின்னான் ஓடிவந்து,

"தாத்தா"

என்கிறான்.

துரைசாமி முதலியார்,

"ஏன்?" -

என்கிறார்.

சின் : சிங்கார மொதிலியாரு பொணத்தண்டே இருந்து சகல காரியத்தியும் பாக்கறாராம். உங்களை கலியாணத்தைக் கவனிக்கச் சொன்னாரு!

துரை : அப்ப அவுரில்லியே இவுரு? ....அப்டியா? ஓகோ அவுரு கூடச் சொன்னார் அவு ராட்டமே இருப்பாரு இவுரு இண்ணு. சரிதான்.

தரு : (பார்ப்பானை நோக்கி)
ஓய் ஒண்ணும் சாங்கியம் வாணும் எடும் தாலியெ.

மங்கிலிய தாரணம் தாராளமாக, மங்களமாக, முடிகிறது.

பெண் மாப்பிள்ளை பாலும் பழமும் உண்டபிறகு, தருமன் தனியே துரைசாமி முதலியாரைக் கும்பிடு கிருன் வாய் நிறைய வெற்றிலை குழைய.

துரை : சவுக்கியமாக இருக்கணும்!

தரு : (வெற்றிலை குதப்பிக்கொண்டே) மொதிலி யாரு இங்கே இல்லிங்களா?

துரை : இல்லப்பா அவுரு. அங்கே இருக்காரு! அதை யேன் இந்த எடத்லே கேக்றே? இருக்கட்டும்!

மற்ருெரு புறம் தனியாக.

ராமசாமி : தருமா மெச்சத் தக்க செயல்.

சீனு : ஏன் ஐயரை வைச்சே?

தரு : கூலிக்காரன்! சொன்னபடி கேப்பான் பாப்பான்!

சீனு . ஓகோ!

ராம : நாளைக்குப் பொணம் எழுந்து வருமே.

தரு : வரட்டும் அது. "எழுந்து வர்ர பொணந் தான்" பாருங்களேன் வேடிக்கையெ!

சீனு : தருமன் தனி ராசியப்பா! அனுமத்து மூளை, ஜமாயி தருமா. வர்ரோம். நாளைக் கிச் சந்திக்கலாம்.

தரு : ஓ! பேஷா!

## 10

நன்ருய் விடிந்தது. கலியாண உடையை நீக்கிச் சாதாரண உடையுடன் தருமன் வீரப்ப முதலியாரிடம் வருத்தமான முகத்துடன் சென்று பெரு மூச்சோடு உட்காருகிருன்.

வீர : கலியாணம் எப்பங்க? ராத்ரி என்ன நடந்துதுங்க?

தரு : எங்க அண்ணரிடம் ஆளே அனுப்பி ஏதேதோ புளிகிப் புட்டானுவ.

வீர : அப்றம்?

தரு : நீ வெளியிலே போஞ நானு தூக்குபோட்டுக்குவேன் இண்ணு ஒரே ஆட்டமா ஆடருரு எங்கண்ணேன், என்ன பண்றது காலெ எடுத்து வெளியே வைக்க முடியுமா நானு?

வீர : அப்றம்?

தரு : நான் வெளியே வல்லேண்ண அப்றம் என்ன?

வீர : முடிவு?

தரு : முடிவு முடிவுதான். என்னுட்டமே ஒருத்தன் இந்த ஊர்லே இருக்கான்; அந்தப் பாவியெ புடிச்சி எல்லாக் காரியத்தையும் சொப்பனிட்டு முடிச்சுபுட்டானுவ.

வீர : எப்டிண்ணேன் ?

தரு : அந்த எழவே ஏன் கேக்றிங்க? வேறு ஒருத்தனுக்குக் கற்கண்டை கட்டிச் சோபனத்தையும் கையோட முடிச்சி புட்டானுவ. இதுக் கெல்லாம் தைரியம் இருக்கணும். அதுதான் ஓங்ககிட்டே பூஜ்யங்க. வீணு எனக்கு இதிலே அவ மானம் வந்துட்டுது. உயிரெ உட்டுக் கலா மிண்ணு கூட முடிவுகட்டி கவுத்தைக் கூட எடுத்து அறையிலே உத்தரத்துலே கூட மாட்டிபுட்டேன் இண்ணு கூட வச்சிக்கிங்க. அப்றம் பாத்தேன். சீ அதுவா பெரிசி? இருக் கிறவரைக் காப்பாத்தி நல்லபடியா செதம்பரத்துக்கு அனுப்பணுமேண்ணு மனசை தெடம் பண்ணிகிணு ஓடியாந் தேன்.

வீர : அப்டியா. உம். அந்தத் துரைசாமி மொதிலி......ஆஹா! எப்டிச் சம்மதிச் சான்! அந்தக் குட்டி எப்டிச் சம் மதிச்சா! உம்!

தரு: நான் சொல்றமாதிரியே சொல்லியிருக்கான், என்னுட்டம் இருக்கிற அந்த ஆளு.

வீர: ஆருக்குக் கட்டிவைச்சிட்டான்?

தரு: கட்டிகினவனும் அந்தப் பையன் தான் இண்ணு கேழ்விங்க. என்ன சொன்னான் அவன்? நீங்க செத்துபுட்டிங்க காலராவிலே இண்ணு நேரே சொல்லி யிருக்கானுங்க. என்ன அக்குறும்பு இண்றது?

வீர: ஓகோ ராத்ரி இங்கே பல்லக்கு வச்சிருந்துதே. விசாரிச்சி இருப்பானுவ. ஆள் சொல்லியிருப்பான் நான் செத்துப் போனதாக.

தரு: அதான் விஷயம். கலியாணத்துக்காக இத்தனை தூரம் செலவு செய்து வீணு போவலாமா இண்ணு சொல்லியிருப்பான். அப்டீண்ணு சொன்ன துரைசாமி முதலி, சிங்கார மொதிலியாரே கட்டிக்றேன் இண்ருரே இண்ணு சம்மதிச்சி புட்டாரு அவுளும் சம்மதிச்சிபுட்டா. அதான் சங்கதி. இண்ணொரு

சேதிங்க. ஒங்களெ மெரட்றது இண்ணு சுத்திகினு இருக்கானுவ. நீங்க இப்பவே பொறப்டு செதம்பரத்துக்குப்போயி அஞ்சாறு நாள் செண்ணு இங்கே வாங்க. என்ன சொல்றிங்க?

வீர: நான் செத்தாலும் சரிதான். நேரே அந்தத் தொரைசாமி மொதிலியெ கண்டு நாலு கேழ்வி நறுக்காகக் கேக்கணும். அந்தக் குட்டியையும் அப்டி! இப்பவே என் 300 ரூபாயெ அணா பைசாவோடு வைச்சுடவாணுமா அந்த நாயி?

மகா கோபத்தோடு வீரப்ப முதலியார் கற்கண்டு வீட்டுக்குப் போகிறார். தருமனே வீரப்ப முதலியாருக்கு முன்னே வேறு வழியாக அதே கற்கண்டு வீட்டுக்குப் போய்க் கலியாண உடையுடன் கற்கண்டின் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளுகிறான்.

தருமன் கற்கண்டை நோக்கி, நாளு டோவுது வீணா! நீ சிறுத்தொண்டப் பத்தன் கதை பாடக் கத்துக்கணும் சீக்கிரம்.

கற்: அதுக்கென்ன இப்பவே தோக்குங்க நல்லா! நானு வாணும்ண்றேன். ரொம்ப ஆசை யாச்சே பாட்டுண்ணா எனக்கு.

தரு : அப்டியா. அடே சின்னுன் போடடா தம்பூரு. கொண்டாடா தாளத்தெ!
(சித்தமாகிறது.)
தருமன் தாளத்தோடு, மொதல்லே புள்ளார் தோத்திரம் பாடணும் எப்டி தெரியுமா?

“ஆதி சிவன் பெத் தெடுத்த
புள்ளையா ரப்பா
புள்ளையா ரப்பா”

சொன்னுத் தானே வரும்.

கற் : ஆதி சிவன் பெத்தெடுத்த
புள்ளையா ரப்பா
புள்ளையா ரப்பா

தரு : ஆ எஞ் செங்கரும்பே! ரவை பேசுதே தொண்டையிலே! உம்!

சின்ன : கொட்டுது ரவை!

தரு : அம்பிகை பெத்தெடுத்த
புள்ளையா ரப்பா!

கற் : ,, ,,

தரு : சிவபெருமாம் பெத்தெடுத்த
புள்ளையா ரப்பா

கற் : ,, ,,

தரு: செவகாமி பெத்தெடுத்த
புள்ளேயா ரப்பா
புள்ளேயா ரப்பா!

கற்: ,, ,,

தரு: சிறுத் தொண்டப் பத்தன் கதை
நான் பாடவேணும்
நான் பாடவேணும்
தேவா துணே, புரிய, நீ வாவா!

கற்: ,, ,, ,, ,,

தரு: நான் சொல்ற படியே சொல்றியேஅப்றம்
என்ன? இண்ணைக்கே தோக்க வேண்டி
யதுதான் தொழிலே

கற்: ஓ கணக்கா. நானு வாணும்
இண்றேன்?

இதற்குள் அங்குவந்த வீரப்ப முதலியார் வீட்டின் முன்புறத்தில் உட்கார்ந்திருந்த துரைசாமி முதலியாரை நோக்கி வயிற்றெரிச்சலாக,

"தொரசாமி மொதிலியாரே சரிதானு நீர் செஞ்சது. எத்தினி நாளா தொரசாமி மொதிலியாரே காத்திருந்தே என்னே இந்தமாதிரி வயித்தை எரிய வைக்க

நல்லா இருக்குது தொரசாமி மொதிலி யாரே நல்லா இருக்குது. எல்லாம் முடிஞ்சி போச்சா இன்னும் ஏதாவது சொச்சம் இருக்குதா ?

துரை : என்னை நீங்க ஒண்ணும் சொல்லக் கூடாது. நான் ஒரு குத்தமும் செய்யலே. அல்லாம் சிங்கார மொதிலியார் கட்டளைப் படி நடந்த காரியம்.

வீர : கலியாணம் முடிஞ்சி போச்சில்ல ?

துரை : ஆமாங்க.

வீர : சரி உம் பொண்ணுக்கு நீர் முடிச்சீர். அதெப்பத்தி என்னுங்க மொதிலியாரே. சிங்கார மொதிலியாரா இப்டி சொன் ஞரு ?

துரை : ஆமாங்க, நீங்க செத்துபுட்டிங்க இண்ணு சொன்ஞரு. நம்பவேண்டிதா போச்சி.

வீர : சிங்கார மொதிலியாரு அப்படியாப்பட்ட அயோக்யரல்லவே ! அல்லாம் இதோ (மாப்பிள்ளையைக் காட்டி) இந்த அயோக் யன் செஞ்ச வேலே. அவராட்டமே இருந் தான் இவன், இருக்கானே ! பாரேன் !

பிச்சை எடுக்றவனுக்கா வாக்கைப் பட்டே மோசக்காரி? அனுபவிப்பே. என் கண்ணுலே பாப்பேன் தகரக் குவளேயெ கைலே தூக்கித் தெருத் தெருவா பிச்சை எடுக்கறத்தை.

கற் : ரொம்ப சந்தோஷமாச்சே தாத்தா? ஓங்களெ கட்டிகினு அழறதிலியும் பிச்செ எடுக்கறது தேவலியே வயிசு மாப்பிள்ளே கூட.

தரு : ஐஸ் பால் சர்பத்தாட்டம் அப்டிசொல்லு!

வீர : அது போவுட்டும் என் பணத்தெ எடும்! 300 ரூபா! இதே நேரத்லே எடும்! என்னுங்காணும் முழிக்கிறீரே. மானம் இல்லே?

துரை : (அழுதுகொண்டே) என்ன சொல்றே மருமகப் பிள்ளே?

தரு : உம்! பெரியவரே நானு மானங்கெட்டவன்? என்னே தெரியாது ஓமக்கு. தெரிஞ்சிக்கிவிங்க சீக்கிரம். மானிங் காணும் நானு. ஒருத்தரு ஒண்ணு சொல்லிபுட்டா இந்த உசிரே அப்டியே உட்டுடு

வேங்காணும். பெரியவரே! ஓமக்குச் சேரவேண்டிய 300 ரூபாயெ அந்த சிங்கார முதலியார் கிட்டே வண்டி கட்டிகினு போயி பைசல் பண்ணிபுட்டு வந்துதான் பெரியவரே தாலியெ கைலே எடுத்தேன்! அதுவும் வட்டியோட! அந்த வட்டியும் தொடர் வட்டி பெரியவரே! அணு பைசாவோட பெரியவரே! அரைக் காசு சொச்சம் வந்துது, ஒரு காசா குடுத்தேன் அதுவுட்-இன்னும் கேளும் பெரியவரே! நான் குடுத்த பணத்லே ஒரு ரூபா ராணி ரூபா செல்லாதிண்ணு எடுத்தாந் தாரு. அதையும் ஒத்துக்கினு வேறெ ரூபா கொடுத்தனுப்னேன் பெரியவரே. சிங்கார மொதிலியாரு விசிறியே வைச்சுட்டுப் பூட்டாரு இப்பத்தான் பெரிவரே இதோ இருக்கான் சின்னன்-கொண்டு போயி குடுத்துட்டு வந்தான் பெரிவரே! பணத்தை கைலே வச்சிகினு விசிப் பலகையிலே தான் ஒக்காந்து இருக்காராம் பெரிவரே! அப்டி நெனைச்சி புடாதியும் நம்பளே; க்ஷத்ரிய புள்ளே

சிங்கக்குட்டி பெரியவரே! என்னே திட்றிங்களா பெரியவரே? நல்லா இருக்குது. இப்பத்தான் ஓங்களைத்தான் தேடி வந்தானுவ அந்தப் போக்றிப் பசங்க. நான்தான் கூரை மழுக்கி அனுப்னேன். பெரியவரே! நேரே செதம்பரம் பொறப்டுங்க பெரியவரே. இது ஒரு மாதிரி ஊரு பெரியவரே! பெரியவரே!!

வீரப்பக் கிழவருக்கு வயிற்றெரிச்சல் ஒரு பக்கம் பயம் ஒரு பக்கம்! அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. சரேரென்று எழுந்தார் ஆத்திரமாக,

"தொரசாமி மொதிலி சவுக்யமா இரும். கற்கண்டு, அனுபவிப்பே. என் வவுரு எரியற மாதிரி திகி திகிண்ணு எரிஞ்சி புடணும்"

என்று சொல்லி வெளியிற் போகிறார் சிங்கார முதலியார் வீடு நோக்கி. துரைசாமி முதலியாருக்குக் கொஞ்சம் வருத்தம் வீரப்ப முதலியார் துன்பத்தைக் கருதி.

கற் : ஏங்க இவுரு நேரே எங்கே போவாரு?

தரு: அந்தக் கொள்ளேயெ நீ நேரே பாத்தா தான் தெரியும். இங்கியே வாயாலே சொன்னு என்ன பிரயோசனம்.

கற்: ரொம்ப வேடிக்கையா இருக்குமா?

தரு: ஆயிரந்தலே படைச்ச ஆதிசேஷன் கூட, சிரிக்க இன்னம் பத்து, பதினஞ்சி தலே கடன் கேப்பான். வரியா இப்பவே? அங்கே நான் சொல்லிகினு இருந்த சிறுத்தொண்டப் பத்தன் கதையை இன்னும் முடிக்லே. மூடிப்போமேபோயி கொஞ்சந்தான் பாக்கி இருக்குது.

கற்: சரி.

சின்னுன், கற்கண்டு, தருமன் மூவரும் தம்பூரா, தாளம், படம், இவற்றுடன் போகிருர்கள்.

## 10

வீட்டுக் குறட்டில் காவல் காத்திருக்கும் குப்பனே நோக்கி, வீட்டு எஜமாஞகிய சிங்கார முதலியார் கூறுகிருர்:

வந்தாஞ சிறுத்தொண்டப் பத்தன் கதை பாட? இல்லியே? சிறுத்தொண்டப்

பத்தன் கதை பையனெ என்ன கஷ்டப் படுத்திட்டுது. பாக்றே இல்லவோ? ராத்ரி யெல்லாம், கொல்ருங்க வெட்ருங்க, இண்ணு அலறித் துடிச்சான் இல்லியோ? என்ன நிலேயிலே கெடத்திவைச்சிருக்கு புள்ளெயெ பாத்தியாடா. தாயி மடியிலே அமுத்திப் புடுச்சிக்கிருளாம். தகப்பனர் கத்தியாலே அறுத்தாராம். இதெல்லாம் கேட்டுகினு இருந்தா ரவை பசங்க கதி என்னகும்? ஆயுட்டுதே.

கண்டிப்பாச் சொல்லிபுட்டேன். அவன் இங்கே இப்ப வந்தாத் தொறத்திப்புடு இல்லே என்னே கூட்டு தெரியுமா?

குப்பன்: நல்லதுங்க.

சிங்கார முதலியார் வீட்டுக்குள் நுழைகிருர். அப்போது தான் கற்கண்டும் தருமனும் சின்னனும் அங்கு வருகிருர்கள். அதே சமயத்தில் வேறு பக்க மிருந்து வீரப்ப முதலியார் காவற்காரக் குப்பனே அடைகிருர். வீரப்பக் கிழவருக்கும் காவற்காரக் குப்பனுக்கும் நடக்கப் போவதைத் தருமன் முதலிய மூவரும் சந்து முடக்கில் ஒளிந்து நின்று கவனிக்

கிருர்கள். அவர்கள் இன்னும் டடத்தை விரிக்க வில்லே.

வீரப்ப முதலியார் குப்பனை நோக்கி, "என்னுங்க முடிவு இப்படியாப் போச் சிங்க." என்கிருர்.

குப்பன் : என்ன அது ?

தருமன், கற்கண்டு ஒருபுறமிருந்து சிரிக்கிருர்கள்.

வீர : கலியாணந் தாங்க.

குப் : எந்தக் கல்லாணம் ?

வீர : இந்தக் கல்யாணந் தானுங்க.

குப் : ஏதையா கல்லாணம் ?

வீர : என்னுங்க அப்டிக் கேக்றிங்களே ?

குப் : பின்னே எப்டிக் கேக்க ?

வீர : நீங்க கவனிச்ச காரியம் இப்டி முடிய லாங்களா ?

குப் : நான் என்னத்தைக் கவனிச்சேன் ?

வீர : தொரைசாமி மொதிலியாரு தானுங்க சொல்ருரு அப்டி.

குப் : எந்தத் தொரைசாமி மொதிலியாரு ?

வீர : என்னுங்க நூதனமாக் கேக்றிங்க ?

குப் : யாருகிட்டப் பேசிறிங்க.

வீர : ஒங்க கிட்டத்தானுங்க.

குப் : ஒண்ணுமே புரியலிங்களே, என்னெ ஆருண்ணு நெனேச்சிப் பேசிறிங்க ?

வீர : சிங்கார மொதிலியாருதானுங்களே நீங்க ?

குப் : நானில்லையா. அவுரு உள்ளே இருக்காரு வருவாரு காத்திருங்க.

வீர : நீங்க இல்லிங்களா ? அப்டிங்களா ? சரி தானுங்க.

வீரப்ப முதலியார் ஒரு புறமாக நிற்கிறார்.

தரு : "மாயா உலக மல்லோ
இந்த உலகம்
இந்த உலகம்
மாயா உலகத்திலே வந்துவிட்டார்"
விரிடா சின்னான் படத்தெ .

சின்னான் படத்தை விரிக்கிறான். கற்கண்டு அதே அடியைத் திருப்பிச் சொல்லிக்கொண்டே உட்காருகிறாள். தருமன் உட்காருகிறான். கடைசியில் சின்னான் தம்பூரா மீட்டிக்கொண்டே இருக்க இருவரும் நெருங்கி உட்கார்ந்து கொண்டே பாட ஆரம்பிக்கிறார்கள். காவற்காரக் குப்பன் மயங்குகிறான்.

தருமனை நோக்கி, "பாடாதே" என்று கூறவும் குப்பனுக்குப் பயம்,

தரு : "சிவபெருமான் வந்தார்
ரிஷபத்திலே—அந்த
ரிஷபத்திலே
சிவ காமி அம்மனும் கூடவந்தா,"

கற்கண்டு திருப்பிச் சொல்லுகிறுள் அதையே.

தரு : ஓன் மனசைச் சோதிச்சண்டா
சிறுத்தொண்டப் பத்தா
சிறுத்தொண்டப் பத்தா
ஓடிவந்து சேருங்கடா கைலாஷம்

கற் : " " "

தரு : சிறுத்தொண்டனையும் மத்த
எல்லாரையும் மத்த
எல்லாரையும்
சிவபெருமான் பாதம் சேர்த்துக்கொண்டார்.

கற் : " " "

இச்சமயம் டாக்டர் சுந்தரமூர்த்தி சிங்கார முதலியார் வீட்டுக்குள் நுழைகிறுர்.

தரு: ஆகையினலே மனுஷரே நீங்க
மனுஷரே நீங்க
அடியாருக் கன்னமிட வேண்டு
மல்லோ

கற்: ,, ,, ,,

கேட் I மெய்தானே
கேட் II அன்னதானத்துக்கு ஈடா ?

தரு: கதை முடியப் போவுது காசி போட்டாத்
தானே ?

அவரவர்கள் காசு போடுகிறுர்கள்.

தரு: "காசுபணம் எல்லாம் கூட வராதல்லோ
கடவுளை பத்தி செய்வீர் மனுஷர்களே.

கற்: ,, ,, ,,

கேட் I செத்துபுட்டா காசு பணமா கூடவரப்
போவுது?

கேட் II உம் அது ஏது?

டாக்டரும் சிங்கார முதலியாரும் வெளியில் வருகிறுர்கள். சிங்கார முதலியார் முகம் களையிழந்து இருக்கிறது.

சிங் : ஒண்ணும் பிள்ளைக்கு ஆபத்து இருக் காதுங்களே.

தரு : சாவது நிச்சயமே மனுஷர்களே
ஓ மனுஷர்களே

டாக்டர் : என்னுங்க இந்த மூதேவிப் பையனெ இன்னும் வச்சிருக்கிங்க ?

சிங்கார முதலியாருக்கு அடங்காத கோபம். "அடே காமாட்டி" போமாட்டே?

என்று சத்தம் போடுகிறார்.

கற்கண்டு எழுந்து ஓட எத்தனிக்கிறாள். அவளையும் ஒரு கையால் தருமன் அழுத்திப் பிடித்துக்கொண்டு

தரு : "கோபஞ்சண்டாள மல்லோ
மனுஷர்களே
மனுஷர்களே"

இப்பதானுங்க வசூல் ஆவுது. இதோ முடிச்சிப்புடரேனுங்க.

கேட் I இதோ ஆயிபுட்டுதுங்க சாமி.

தரு : (கேட்கும் ஜனங்களிடம்) நீங்க கேளுங்க மொதிலியாரெ

என்று மெதுவாகக் கூறுகிறான்.

"கோபஞ் சண்டாள மல்லோ
மனுஷர்களே
மனுஷர்களே
குஞ்சித பாதத்தே சேருங்க."

தருமன் அதிக உருக்கத்தோடு இந்த அடியைக் கூறியதோடு தானும் கும்பிடுகிறுன். அதைக் கண்டு கேட்பவர்களும் கும்பிடுகிறுர்கள்.

தரு : நிறுத்திப் புடட்டுமா?

கேட் I முடிங்க! சொல்லுங்க.

கேட் II குறுக்க நிறுத்தலாமா?

சிங்கா : இருக்கட்டுங்க. முடியட்டுங்க.

டாக்டர் : காய்ச்சல் அதிகமா இருக்குது. கொஞ்சம் இறங்கணும். இப்ப ஒண்ணும் சொல்ல முடியாது. நான் வர்ரேன் 15 நிமிஷம் பொறுத்து.

டாக்டர் போகிறுர். சிங்கார முதலியார் பரபரத்த உள்ளத்தோடு நிற்கிறுர். குறட்டிலே வீரப்ப முதலியார் நெருங்குகிறுர்.

குப்ப : இந்தப் பெரிவுரு ஓங்களே தேடருருங்க.

சிங்கா : என்னு சேதி?

வீர : ஏதோ தாங்க மன வலியா இருக்றிங்க. கெட்டது கெட்டதுங்க, ஐந்நூறு ரூபா ஒண்ணு. துரைசாமி மொதிலி கொடுத்த முன்னூறுரூபாஒண்ணு. ஆக 800ரூபாயெ குடுங்க.

சிங் : சரிதான் யாரிடத்லே குடுத்தே யாரே கேக்றே?

வீர : என்னுங்க...நேத்து இதே எடத்லே...

சிங்கார முதலியார் தருமனை நோக்கி, "ஏண்டா இவரெ ஏமாத்திப் பணத்தே வாங்கிக் கினியா ? என்கிறார்.

தரு : அவுரையே கேளுங்க.

சிங் : ஏனையா பெரியவரே சிறுத்தொண்டப் பத்தன் கதை பாடுறனே அவனு?

வீர : அந்தப் பிச்சைக்காரப் பையன் கிட்டவா குடுப்பேனுங்க?

சிங் : அப்டின்னுப் போங்களேன்.

வீர : நீங்க இந்த வூட்டு மூத்தவருங்களா ?

சிங் : எந்த ஊட்டுக்கு? அட அடையாளமே தெரியிலிங்க ஒங்களுக்கு. சரியாவிசாரிங்க பெரியவரே.

வீர: அப்ப நீங்க வாங்கலே பணம் ?

சிங் : இல்லே.

வீர : ஏன் ஐயா (குப்பனை நோக்கி) நீங்களும் வாங்கலே ?

குப் : இல்லிங்க.

சிங் : அவன் கிட்டக் கொடுக்கலிங்களே ?

வீர : இல்லிங்க

தரு : (இச்சமயத்திலே)
காண்ப தெல்லாம் பொய்யே
இந்த–ஓலகத்திலே
கடவுள் மாத்ரம் மெய்யே
மனுஷர்களே.

(கும்பிடுகிறுன். மற்றவரும் கும்பிடுகிறுர்கள்)

சிங் : அட காமாட்டி நிறுத்திட்டுப் போ மாட்டே ? கதெ? சொல்ருன். கதெ ! பாவிப் பையா. கதை கேட்டுத் தாண்டா குழந்தே ஆபத்தாக் கெடக்கிருன். தொலெஞ்சி போயேண்டா !

தரு : " இந்தச் சிவகதையைக் குத்தம் சொன்னபேர் எரிகின்ற நரகத்திலே விழுவாங்க–நரகத்திலே விழுவாங்க "

சிங் : அடேய் கிண்டலா பண்றே என்னே? தோலே உரிச்சிடுவேன்.

கேட் (i) ஓங்களே இல்லையா நீங்க சும்மா இருங்க.

கேட் (ii) கதையை ஏஞ்சாமி கெடுக்றீங்க.

கதை கேட்கும் ஜனங்கள் அனைவரும் சிங்கார முதலியாரை வெறுப்பாகப் பார்ப்பதைச் சிங்கார முதலியார் உணருகிருர்.

சிங் : வேறு எடத்துக்கு அவனே அழைச்சிக்கினு போங்க.

தரு : இதோ முடிஞ்சி போச்சிங்க.
பணக்காரர் என்று சொல்லிக்
கிருவங்கொள்ளா திங்க
எங்கப்பன்— பரமசிவன்பாதம்
நெனையுங்க"

சிங் : என்னடா சொன்னே?

கேட் (i) ஓரே முட்டாக் கோவிச்சிக் கிறிங்களே

கேட் (ii) என்னுங்க சாமி பண்ணுவிங்க. கடிச்சித் திண்ணு புடுவிங்களா?

இவைகளைக் கேட்டுக்கொண்டே டாக்டர் வருகிருர்.

சிங் : என்ன போக்கிரித்தனம் பண்ருனுங்க இவன்கள்!

டாக்டர் : அவனெ ஆதரிக்க ஜனங்கள் இருக்கும் போது நாம் என்ன செய்றது?

சிரு : "இந்தச் சிவகதையைக் குற்றம் சொல்லு கிறவர்கள் எரியும் நரகத்தில் விழுவாங்க" என்று பாடுகிருன் என்னைக் குறித்து. அதே மாதிரி. அந்த ஜனங்களும் ஏமேலே கோவிச்சிக் கிருங்க, என்ன முட்டாள் தனம்.

டாக்டர் : "முட்டாள் தனம்" அதற்கு ஜனங்களின் ஆதரவு இருக்குதே. அப்படி இருக்கிற வரைக்கும் அவன் போக்கிரித்தனம், ஏமாற்றிப் பிழைக்கும் பிழைப்பு இவை கள் இருந்து தானே தீரும்.

டாக்டர் உள்ளே போகிருர். சிங்கார முதலியார் மகா கோபத்தோடு தருமனை உறுத்திப் பார்த்தபடி நிற்கிருர். அச்சமயத்தில் வீரப்ப முதலியார்

'அப்ப என்னுங்க ஏம்பணத்துக்கு ஒரு வழியு மில்லிங்களா?

சிங் : அடச் சீ போங்காணும் பைத்தியமா உமக்கு? பூடும்இங்கே நிற்கப் படாது.

வீரப்ப முதலியார் அந்த அதட்டலின் சத்தத் தால் விழுந்தடித்து எழுந்து நடக்கலுற்ருர்

தரு: "இந்தச் சிவ கதையைச் சொல்லிய பேர்கள் இன்பத்தை அடைவார்கள் எந்நாளும்"

சிங்: உம் அப்றம்.

தரு: இந்தச் சிவகதையைக் கேட்டபேர்யாரும்
எம் பெருமான் பாதம் சேர்வாங்க
எம் பெருமான் பாதம் சேர்வாங்க
சேர்வாங்க
வாங்க
க

சிங்: இனிமே இந்தப் பக்கம் வருவியோ?

சின்னுன் படத்தைச் சுருட்டுகிருன். தருமனும் கற்கண்டும் எழுந்து நிற்கிருர்கள்.

தரு: "இந்தக்கதை அருமை தெரியாத மனிதர் எருமை மாடாப் புறந்து திரிவாங்க"

சிங்: அடே

கேட் (i) ஞாயந் தானுங்களே?

கேட் (ii) பின் னென்னுங்க

சிங்கார முதலியார் வீட்டுக்குள் போய் விடுகிருர். ஜனங்கள் போகிருர்கள்

ஒரு புறமாக.

கற்: அந்தக் கெழவர் போறத்தே பாருங்க பாவம்

தரு: (தாளம் போடுவது போல் வெறுங்கை யால் பாவனை காட்டிக் கொண்டே)
பாவம் பொய் புண்ணியம் பொய்
மனுஷர்களே
ஓ மனுஷர்களே
பரமசிவன் மெய்யல்லோ எப்போதும்?

கற்: பெரியவருக்கு அந்த முன்னூறு ரூபா குடுக்கலியா நீங்க. குடுத்துப் புட்டதாச் சொன்னிங்களே சிங்கார மொதிலியார் கிட்ட.

தரு: காசும் பொய் ரூபாயும் பொய்
மனுஷர்களே இந்த
மனுஷர்களே இந்தக்
கற்கண்டும் நானும் மெய் எப்போதும்.

கற்: 500 ரூபா வேறே வாங்கினிங்களோ பெரியவுரு கிட்டே?

தரு: "பெரியவர் பொய் சின்னவர் பொய்
மனுஷர்களே நாம்ப
பிழைப்பது தான் மெய் கற்கண்டே
சீனுக் கற்கண்டே

# பொறுமை கடலிலும் பெரிது.

[முத்துப்பாக்கம் பெரிய எஜமான் ஓர் சுய காரியப் புலி. அவர் தம் காரியத்தில் அதிக அக்கரையும், சுறு சுறுப்பும் உள்ளவர். பிறர் காரியத்தில் மகா மந்தம்.

முத்துப் பாக்கம் 50 வீடுகள் உடைய கிராமம். நமது பெரிய எஜமான் ஊருக்கே பெரிய எஜமான். மிகப் பெரிய மிராசுதார். அவருக்கு 15 வயதுள்ள பிள்ளையாண்டான் உண்டு. அவரை ஊராரும், வீட்டுக் கணக்கர். ஆட்கள் முதலியவர்களும் சின்ன எஜமான் என்பார்கள். சின்ன எஜமான் தவிர 8, 5, 3, 1 வயதுள்ள 4 பசங்களும் உண்டு.

அதிகாலையில் வெளிக்குப்போய் பெ. எஜமான் தம் வீடு நோக்கி மெதுவாக வந்து கொண்டிருக்கிறார். பரிதாப முகத்துடன் வீட்டுக்கணக்கர் பின் தொடர்கிறார்.]

கணக்கர் எஜமான்! வீட்டில் என் மனைவியைப் பாம்பு கடித்துவிட்டது

பெ. எ: (இந்த வார்த்தையைக் கேட்டதில் பதை பதைப் பொன்றுமின்றி) சாந்தலிங்கம் நேற்று வட்டிப் பணம் கொடுத்தானா?

கணக்கன்: கொடுத்தான். வைத்யரை இட்டு வந்து காட்டினேன். சீக்கிரமாக, பெரிய எஜமானிடம் ஓடி, மருந்து கேட்டு வாங்கிவா என்று சொன்னார். ஓடிவந்தேன்.

பெ. எ: அந்த முத்துச்சாமி என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான். எப்போதுதான் பணம் கொடுப்பான்?

கணக்கன்: இந்த மாதத்திலேயே கொடுத்து விடுவதாகச் சொன்னான். வந்துவிடும். வைத்தியரிடம் பாம்புக்கடி மருந்து இல்லையாம். உங்களுக்குச் செய்து கொடுத்தாராம் போனமாதம். அவசரமாகக் கொடுங்கள்.

பெ. எ: விழுப்புரத்தில் இப்போது என்ன சினிமா நடக்கிறது?

கணக்கன்: இந்திப்படம். கொஞ்சம் அவசரமாக வந்தால் தேவலை எஜமான்.

## பொறுமை கடலிலும் பெரிது

பெ. எ : பொறுமை கடலிலும் பெரிது.

கணக்கன் : இதுக்குக் கூடவா ?

பெ. எ : சின்னசாமியைக் கணக்குப் பிள்ளையாய் வைத்துக் கொள்ளச் சொல்லி, உன்னை நீக்கி விடச்சொன்னூர்; என்னிடம், தொந்தரவு பண்ருரே.

கணக்கன் : உங்க சித்தம். மருந்து இருக்குதல்ல உங்க கிட்ட ?

பெரிய எஜமான் தம் வீட்டுத் திண்ணையை அடைந்துவிட்டார். அவர் உள்ளிருப்பவரை நோக்கி.

பெ. எ : பாயைக் கொண்டுவந்து போட்ரு. தலைக் காணிஎடுத்துவா. காலெல்லாம்வலிக்குது.

கணக்கர் : உட்கார்ரிங்களே. மருந்து அவசரமாச்சே எஜமான்.

இதற்குள் பாய்போடுகிருன் ஓர் ஆள். தலையணை போடுகிருன் ஒருவன். கால் பிடிக்கிருன் ஒருவன்.

பெ. எ : எந்த வைத்யர் ?

கணக்கர் : வேலுசாமி.

பெ. எ : உம்.......கையைப் பிடிடா.

இதற்குள் கணக்கர் இந்தப் பாவியின் அட்டகாசம் பொறுக்க முடியாமல் பெரிய எஜமான் வீட்டினுள் புகுந்து அங்கு இருக்கும் சின்ன எஜமானிடம் கூறுகிறுன்.

**கணக்கர்:** சின்ன எஜமான்! என் மனேவியைப் பாம்பு கடித்துவிட்டது. மருந்து இருக்குதாம் இங்கே. அவசரமா எடுத்துக் கொடுங்களேன்.

**சின்ன எ:** அப்படியா. அப்பாவிடம் இருக்கு. கேட்டியா?

**கணக்கர்:** அவர் எப்போது வர்ரது? அதற்குள் மனேவி ஒழிஞ்சிபூடுவாள் போலிருக்கே

**சின்ன எ:** (வெளியில் தன் தகப்பனே நோக்கி) அப்பா பெட்டிச் சாவிகொடுங்க. மருந்து வேணுமாங் கணக்கப்பிள்ளேக்கு,

**பெரிய. எ:** காப்பி சாப்பிட்டியா? என்ன பலகாரம் வைச்சா அம்மா?

**சி. எ:** தோசை சொஜ்ஜி! சாவிகொடுப்பா பாம்பு கடிச்சிட்டுதாமே, கணக்கப் பிள்ளே வீட்டில்.

**கணக்கன்:** உடனே மருந்துகொடுக்கணும் என்று வைத்யர் பறக்ருர்.

பெரிய. எ: வரதராஜலு கடிதம் போட்டானே அதை எடுதம்பி.

**சின்ன எஜமான் எரிச்சலுடன் உள்ளே போகிருன்**

கணக்கன் : என்ன ஆச்சோ வீட்டில்! மருந்து இருக்குதல்ல எஜமான் ?

**இதற்குள் ஓர் ஆள் தினசரி ஒன்றைக்கொண்டு வந்து கொடுக்க அதை வாங்கி விரித்துக் கணக்கனை நோக்கி.**

பெரி. எ: உள்ளே கண்ணுடியை எடுத்துவா.

கணக்கன் : வாசித்த பிறகுதான் எழுந்திருப்பிங்களோ. ஐயோ அவசர மாச்சே எஜமான்

பெரிய. எ : பொறுமை கடலிலும் பெரிது.

**விசிறியிருந்த ஆள் ஓடிக் கண்ணுடியை எடுத்துக் கொடுக்க, பெ. எ. கண்ணுடியைத் துடைத்துப் போட்டுக் கொண்டு வாசிக்க ஆரம்பித்து விடுகிருர்.**

கணக்கன் : சாவியைக் குடுங்களேன் எஜமான் எப்போ வாசிக்கறது? எப்போ மருந்து கொடுக்கறது ?

பெரிய. எ: என்ன கடித்தது ?

கணக்கர் : பாம்பு.

(வாசிக்கிருர் பெரிய எஜமான்.)

கணக்கர்: பாம்புங்க.

பெரிய. எ: மருந்து இல்லியே.

கணக்கர் கையுதறிக்கொண்டு வீட்டைநோக்கி ஓடுகிருர்.

கணக்கனின் பந்து:

இப்படிக்கொடும் மருந்தை! ஆர் வீட்டில்? அவசரமாகக் கொஞ்சம் தண்ணீர் கொண்டா. மருந்தே வாயில் போட்டுத் தண்ணியை ஊத்தனும்.

((உடனிருக்கும் வைத்யர் கையை நீட்டுகிருர்)

கணக்கர்: எங்கே? அந்தப்பாவி இந்நேரம் காத்திருக்க வைத்து மருந்து இல்லேண்ணு சொல்லிவிட்டானே.

என்று கூறி, அங்கு வளர்த்தி வைத்திருக்கும் தன் மனைவியை நோக்கி.

தனபாக்யம்!

(தனபாக்யம் வாயில் நுரை தள்ளுகிறது.)

வைத்தியர்: நா....நா...நான்.....போ ...போய்....வ....வ வ...வர்ரேன்.

போகிருர்! கணக்கனும் உடன் போகிருன்.

இதற்குள் பெரிய எஜமானனுக்குக் கால் அமுக்கிக் கொண்டிருக்கும் இரிசனின் தகப்பனுராகிய ஓர் கிழவன் பெ. எஜமானனை நோக்கி.

கிழவன் : பேரன் ஊருக்குப் போரான் பாட்டிகூட! அரைரூபா குடுங்க. குடுத்தனுப்பவாணுங்களா எஜமான் ?

பெரிய. எ: தெக்கு வெளியிலே பயிரெல்லாம் எப்டியிருக்கு பார்த்தியா கிழவா ?

கிழவன் : பாத்தேன். நல்லா இருக்கு. அதோ நிக்ருங்க. தே வந்துட்றேன், இண்ணு ஓடியாந்தேன். குடுங்க.

பெரிய. எ : முதுகே உருட்டு.

இரிசன் : எங்க பெரிவரே அனுப்ணு தேவலே எஜமான்.

இதற்குள் விசிறியிருந்த குப்பனின் இடதுகையில் ஒரு தேள் கொட்டிவிடுகிறது.

குப்பன் : ஐயோ! (பார்க்கிருன் தேள்)
தேள் கொட்டி புட்டுதுங்க.

பெரிய. எ: இந்தப் பக்கம் வந்து விசிறு. பொறுடா.

(மறுபக்கம் வலியோடு விசிறுகிருன். சினனை இருவர் தூக்கிவந்து பெ. எ. எதிரில் தெருவில் கிடத்துகிருர்கள்,

கொள்ளு: வேலுப்பையன் இவனெமண்டையை ஒடைச்சிபுட்டு வூட்லே பூந்து பொண்டு வளே அடிச்சுபுட்டு, பணம் நகை யெல் லாம் தூக்கிக்கினு நொச்சிக் காட்டுக்கு ஓடிப்புட்டான். போலீஸுக்கு ஆளெ உடுங்க. ஆகவேண்டித்தே பாருங்க எஜமான்.

பெரிய. எ: அங்காரு!

மனேவி கனகம்: (உள்ளே யிருந்துவந்து) ஏன்?

(பெ. எ. பேப்பர் வாசிக்கிறுர்)

வேலுப்பையன் ஓடிப்புடுவாங்க.

கிழவன்: கொஞ்சம் தயவு பணணுங்க.

*காயப்பட்டுக் கிடக்கும் சீனன் தத்துக் குத் தலான நிலேயில்,*

சீனன்: என்னெ காப்பாத்துங்க. அவனெ புடிக்க ஏற்பாடு பண்ணுங்க.

வைத்தியர்: "ம"......

*மருந்து என்று சொல்ல எண்ணி "ம" எழுத் தில் அகப்பட்டுக்கொண்டு அவஸ்தை யடை கிறுர் தெற்றுவாயராகிய வைத்தியர்*

கனகம் : ஏன் கூப்பிட்டிங்க.

பெ. எ : இதோ வந்துட்டேன்.

கணக்கன் : என் மனைவிக்கு உயிர் போவுதுங்களே எழுந்திருங்களேன்.

பெ. எ : பொறுமை கடலிலும் பெரிது.

(பேப்பர் வாசிக்கிறார் உற்றுக் கவனித்தபடி. சுப்ரமண்ய குருக்கள் வருகிறார்.)

சுப்ர : வரணும். (இடது கையைத்தூக்கி ஆசீர்வதித்தபடி)

பெரிய. எ : வாங்க சாமி. உக்காருங்க.

சுப்ர : உட்கார்ரதுக்கில்லே. கொஞ்சம் அவசரமா வந்தேன். நம்ம ஆத்லே இன்னிக்கு நம்ம மருமான் ஊருக்குப் போறது அவன் ஆம்படையாளெ கூட்டினு.

பெ. எ : ராமைய குருக்கள் சௌக்யமா இருக்காரா?

சுப்ர : இருக்கார். மருமான் வந்தா செலவு இருக்காதா? 10 ரூபாய் கொடுங்க. நிக்க வைச்சிட்டு வந்தேன்.

பெ. எ : கடுதாசி கிடுதாசி போட்டாரா?

சுப்ர : போட்டார். நான் அப்றம் வந்து சொல்றேன். என்னே அனுப்புங்க.

பெ. எ: (பேப்பர் பார்க்கிறார் பழையபடி)

சுப்ர : என்னே அனுப்புங்க. சாவகாசமா பாருங்களேன் பேப்பரை.

பெ. எ : ஓங்கமேலே ஒரு பிராது.

சுப்ர : என்ன அது ?

பெ. எ: (பேப்பர் பார்க்கிறார்.)

கணக்கன் : ஆபத்துங்க. (பரிதாபமாய்)

கிழவன் : அரை ரூபாய் தானுங்க. (பரி....;)

இரிசன் : எங்கபெரியவரேஅனுப்புங்க(பரிதாபமாய்)

குப்பன் : தேளுங்க. (பரிதாபமாக)

கொள்ளு : திருட்டுப் பையன். (பரி...)

சுப்ர : 10 ரூபாய். (கையைப் பிசைந்தபடி)

சீனன் : ஐயோண்ணு போவுது உயிர். (என்றிவ்வாறு அவரவர் முணு முணுத்துக்கொண்டிருக்கிறார்கள் வாய் ஓயாமல்

மனைவி : (பெ. எஜமானை நோக்கி.) ஏன் கூப்பிட்டிங்க

பெ. எ : கலியாண விஷயம் என்ன ?

கனகம் : அவன் கலியாணம் இப்ப வாண்டாம் இண்றுன். சம்பாதனைக்கு வழி தேடிய பின்னே தான் இண்ணு சொல்றுன்.

பெ. எ : (கணக்கனை நோக்கி) நம்ப பையன் பெரியவனு போயிட்டான் கலியாணம் பண்ணணுமா இல்லையா ?

கணக்கன் : ஆபத்துங்க.

பெ. எ: (திடுக்கிட்டு, நிதானித்து.) கண்ணுக்குப் பிடிச்ச பொண்ணு பார்த்தா போறது. (கிழவனை நோக்கி) ஏன் கிழவா பெண்ணு நமக்கு அகப்படாது ?

கிழவன் : அரை ரூபாய் தானுங்க.

பெ. எ : (திடுக்கிட்டு, நிதானித்து) நல்ல இடத்துப் பெண் ஒண்ணு இருக்கு. உங்க அப்பாவை அனுப்பிக் கேக்கலாமிண்ணு நினைக்கிறேன். (இரிசனை நோக்கி) ஏன் ?

இரிசன் : எங்க பெரியவரெ அனுப்புங்க.

பெ. எ : என்னடா மடப்பயலே.

இரிசன்: அவசரங்க. பெரியவரெ அனுப்புங்க.

பெ. எ:- ஓகோ.........ஏண்டி கனகம்? ஜமீன்தார் மகள் எப்படி. படிச்ச பொண்ணு. நல்ல அழகு. (குப்பனை நோக்கி) ஏன் ?

குப்பன்:- தேளுங்க.

பெ. எ:- தேளா ! (நிதானித்து) ஓகோ உன் சங்கதியோ? (மனைவியை நோக்கி) ஜமீன்தார் அந்தஸ்தில் குறைஞ்சவரா கனகம் ? (கொள்ளுவை நோக்கி) அவர் அந்தஸ்து எப்டி ?

கொள்ளு:- திருட்டுப்பையன்.

பெ. எ:- அடடடா. என்னுடா அப்டி சொல்லிட்டியே ஜமீன்தாரே.

கொள்ளு:- திருட்டுப்பையன் ஓடிடுவானுங்க.

பெ. எ:- ஓகோ அதுவா?

கனகம்:- எங்க அண்ணன் மவ நல்லா இல்லியா? அவளெ ஏங் கட்டப்படாது? நாங்க என்னு பொறமாட்டமா? பரியம் ஏதாவது குடுங்க. ஏன் குருக்களே?

சுப்ர:- பத்து ரூபாய்.

கனகம்:- அட ஒன்னே பாடையிலே வைக்க. குருக்களா நீ. மூஞ்சே பாரு திருட்டுப்பையனுட்டம்.

சுப்ர:- மருமானெ ஊருக்கு அனுப்பணும். 10 ரூபாய் தேவையிண்ணேன்.

கனகம்:- ஓகோ. (பெ. எஜமானை நோக்கி) நீங்க கட்டாட்டிப் போனு எங்கூட்லே சோறு கொதிக்காத பூடாது. கிராக்கி இல்லாமல் இல்லே. (இச்சமயம் சீனன் எழுந்திருந்து உட்கார்ந்திருக்கிறுன். அவனைக் காட்டி) சீனனுக்குத் தெரியும் எங்கவீட்டு நெலவரம்.

சீனன் :- ஐயோண்ணு போவுது உயிரு.

கனகம் :- ஏங் குடும்பமா ?

சீனன் :- போலீசுக்குச் சொல்லுங்க. மண்டை ஒடஞ்சி போச்சிங்க.

பெ. எ :- உனக்கென்ன செய்யணும்ண்றே ?

கிழவன் :- அரை ரூபாய். நாழி ஆவுதுங்க.

பெ. எ :- சரி. ஒனக்கு ?

கொள்ளு :- வேலு ஓடிப்டுவானுங்க. சீக்கிரம் போலீசுக்கு ஆள் அனுப்பனுங்க.

பெ. எ :- சரி. நீ ?

குப்பன் :- தேள் கொட்டிபுட்டது. போறேனுங்க ! மருந்து இருந்தா போடுங்க !

பெ. எ :- சரி. நீர் ?

வைத்தியர் : ("ம" என்ற எழுத்தைத்தாண்டி மருந்து என்று கூறி முடித்து, பெட்டியில் என்பதற்கு "பெ" என்ற எழுத்தில் மாட்டிக் கொண்டு அவஸ்தைப்பட ஆரம்பிக்கிறார்.)

கணக்கர் :- மருந்து, பெட்டியில் இருக்கிறதாமே ! அவசரம். எஜமான் !

பெ. எ :- சரி, நீ.

கிரிசன் :- எங்க அப்பாவை அனுப்புங்க அவசரமா.

பெ. எ :- சரி நீங்க.

சுப்ர:- அதான். 10 ரூபாய் கேட்டேனே.

பெ. எ:- சரி. (உள்ளே போகிறார். அனைவரும் ஆவலாகக் காத்திருக்கிறார்கள். பெ. எ. சற்று நேரம் சென்றபின் ஒரு பொட்டணத்துடன் வெளிவருகிறார். கணக்கர் கை நீட்டுகிறார். ஆவலுடன் பொட்டணத்தைக் கணக்கனிடம் கொடுத்துக் கூறுகிறார்.)

இந்தப் பொட்டளத்தை கோயில்லே குருக்கள் இருப்பார். அவர்கிட்ட கொடுத்துட்டு அவசரமா ஓடியா.

கணக்கன்;- ஐயோ. எனக்கிண்ணு நெனச்சேன்.

(பொட்டளத்தை வாங்காமல் தலை தாழ்த்தி நிற்கிறான்.)

பெ. எ:- (திண்ணையிலே அதை வைத்து)அவசரமா கொடுத்துட்டு ஓடியா.

(உள்ளே போகிறார். சிறிது நேரம் சென்று எட்டணாவுடன் வெளிவந்து)

பெ. எ:- இந்தா—(அரை ரூபாயைக் காட்டி.) யாரங்கே?

கிழவன்:- நான் தாங்க. (ஆவலாகக் கைநீட்டி நெருங்குகிறான்.)

(தேள் கொட்டப்பட்ட குப்பனை நோக்கி,

பெ. எ:- குப்பா இதைக் கொண்டுபோய் ராமசாமி பிள்ளை நெய்கேட்டார். நல்ல நெய்யா வாங்கிக் கொடுத்துட்டு ஓடியா.

கிழவன்:- எனக்கு எஜமான்? என்னை அனுப்புங்க.

குப்பன்:- கொட்டுவாயில் ரொம்ப கடுக்குதுங்க.

பெ. எ:- சரி நான் அனுப்புகிறேன். (உள்ளே போகிருர். சற்று நேரம் சென்று ஒரு நோட்டோடு வெளிவருகிருர்)

சுப்ர:- ரொம்ப உபகாரமாபோச்சு (என்று கூறிக் கையை நீட்டுகிருர்)

பெ. எ:- நாளைக்கு ஒரு விசேஷம் அதற்குச் சில்லறை வேணும். வைத்யரே மாத்தி வரீரா?........அப்றம் ஆகட்டும்............ இருங்க இதோ வந்துட்டேன்.
(சிறிது நேரம் சென்று குப்பனை நோக்கி) பல்லு குச்சி நல்ல வேப்பங்குச்சா பாத்து ஒடிச்சிகினுக்கு வா. இதோ சாப்டுட்டு வந்துடுறேன்.
(உள்ளே போகிருர் இதற்குள் ஒரு பையன் ஓடிவந்து கணக்கனைப் பார்த்து)

பையன்:- ஓங்க பொண்டாட்டி செத்துப்புட்டாங்க.

கணக்கன்:- பூட்டாளா ஐயோ.
(இதற்குள்)

பெ. எ:- பூஜையை முடிச்சிபுட்டு வர்ரேன்.

கணக்கன்:- அட- காமாட்டி (என்று கூறி ஓடுகிருன்)

குருக்கள்:- சரியாபோச்சு!
(போகிருன். மற்றவர்களும் முணுத்துக் கொண்டும், திட்டிக் கொண்டும் போகிருர்கள்.)

## மறுநாள்

(பெ. எஜமான் திண்ணையில் உட்காரந் திருக்க, மனைவி எதிரில் நிற்கிருள்.)

பெ. எ:- நேற்றே தெரியும் எனக்கு! அவன் ஒரு மாதிரியா யிருந்தான். காசிமாலை இருக்கா? அதையும் எடுத்துகினு பூட்டாஞ?

கனகம்:- அதையுந்தான்.

பெ. எ:- அடபாவி! எங்கே போயிருப்பான்? மொத்தம் பதிஞயிர ரூபாய் நகை இருக்கும். ரொக்கம் ஆயிரம். அல்லாத்தையும் எடுத்துக்கினு போய்ட்டானே. பணம் நகை போகட்டும். பிள்ளை இருக்கிற இடம் தெரிந்தா போதும்.

கனகம்:- அதுதானே நான் நெனைக்கிறேன். ராத்ரி கௌம்பி நேரே ரயிலுக்குப் போயிட்டான் இருட்டில்! காலை 3 மணி ரயில் ஒத்துக்கிச்சி எங்கியோ பூட்டான்!
(தந்தியுடன் ஒரு பியூன் சைக்கிளில் வருகிறான்.)

பெ. எ:- தந்தியா!
(தந்தியைக் கொடுக்க அதை வாங்கிக்கிறார்)
இப்ப என்ன மணி? 3 இருக்கும் ஐயோ இன்னும் ஒரு மணி நேரந்தானே இருக்குது. அவசரமா ரயிலுக்குப்போகணுமே! ஐயையோ!

கனகம்:- என்ன சங்கதி? கேட்கறனே?

பெ. எ:- சென்னையிலே நாளை காலையிலே கப்பல் ஏறப்போறானும் பையன் மோரீசுக்குப் போக! அதுக்குள்ளே நாம் வந்தா தாம் பார்க்க முடியுமாம். கிளம்பு, கிளம்பு. இன்னும் ஒருமணி நேரந்தான்! 6 மைல் இருக்கு ரயில் ஸ்டேஷனுக்கு! கிளம்பு.

(கனகம் உள்ளே ஓடி உடுத்துகிறாள். மூட்டை கட்டுகிறாள். பிள்ளைகட்கு உடுத்

துகிருள் வெகு பரபரப்புடன். பெ. எ. வெளியில் ஓடுகிருர். கணக்கப்பிள்ளையின் வீட்டெதிரில் நின்று)

பெ. எ:- கணக்கப்பிள்ளை! ஓடியா.
(கணக்கப்பிள்ளை வருகிருன்)
ரயிலுக்கு அவசரமா போகணும் வண்டிக் காரனைக் கூப்பிடு ஓடு.

கணக்கன்:- நாளைக்குத்தான் மூணு நாள்! கொஞ்சம் கிரியை விசேஷமாக நடத்த யோசனை.

பெ. எ:- நான் என்ன சொல்றேன்! அவசரம் ஓடு.

கணக்கன்:- பொறுமை கடலிலும் பெரிது.

பெ. எ:- என்ன மடையா சீக்கிரம் வண்டி.

கணக்கன்:- என்ன விஷயம்?

பெ. எ:- ஐயோ! சோம்பேறி நாயே.
(என்றுகூறி வண்டிக்காரனுகிய குப்ப னின் வீட்டிற்கு ஓடி எதிரில் நின்று)
குப்பா! ஓடியா வண்டி கட்டு.
(குப்பன் வந்து எதிரில் நின்று)

குப்பன்:- தோ வந்துட்டேன். இந்தக் கையைத் தூக்க முடியலிங்க. தேள் கொட்டிச்சி பாருங்க. என்னுங்க.

பெ. எ.- கதை சொல்லியிருக்க நாழியில்லை. அவசரம் ஓடியா. வண்டியைக்கட்டு. வா.

குப்பன்:- (தன் வீட்டுக் காரியை நோக்கி) அங்காரு? வெற்றிலைப் பையை எடு. தோ வர்ரேன் போங்க.

பெ. எ:- என்ன? வர்ரியா? புறப்டு. ஓடு. சொல்றனே.

குப்பன்:- பொறுமை, கடல் இருக்குது பாருங்க. அதுக்கீடு பெரிசுங்க

பெ. எ:- அடே வாடா சீக்கிரம்.

குப்பன்:- சரி. (நகருகிறான். பெ. எ. அவனைத் தள்ளிக்கொண்டு ஓடுகிறார்.)

பெ. எ:- போய் வண்டியைக் கட்டு இதோ கொள்ளுப்பையனைக் கூட்டிகினு ஓடியார்ரேன். ஓடு.

(அவசரமாக ஓடுகிறார்.)

பெ. எ. வீட்டின் எதிரில் கட்டைவண்டி நிற்கிறது, அதன் கூண்டு தனியாக ஒரு புறம் இருக்கிறது. அதைப் பழுதுபார்க்க ஆரம்பிக்கிறான் குப்பன்! பெரிய. எ. கொள்ளு, சீனு, கணக்கன், வருகிறார்கள்.)

பெ. ஏ:- கணக்கப்பிள்ளே. புஸ்தகத்தே யெல்லாம் எடுத்து உள் அறையிலே வைச்சிக்கோ. நான் வர இரண்டு நாள் ஆவும்.
என்னுடா செய்யறே குப்பா. போதும் பழுதுபார்த்தது. கூண்டே எடுத்துமூடு, சீக்கிரம்.

குப்பன்:- சரிங்க. (கூண்டைத் தூக்கி வருகிறுன்.) பெ. எ. (உள்ளே போகிறுர்.)

பெ. எ:- போகவேண்டிய மூட்டை முடிச்சி, பொட்டி, போழை யெல்லாம் ஒரு பக்கம் எடுத்துவை கனகம்.
அப்றம் உடுத்தலாம், சீக்கிரம், நாழி ஆவுது.

(இதற்குள் கொல்லேப்புறமிருந்து கழுதை ஒன்று வீட்டுக்குள் நுழைந்துவிடுகிறது. கூடத்தில், எடுத்துப் போகவேண்டிய சாமான்களே, கனகம் கொண்டுவைக்கிருள். இடுப்பில் ஒரு பிள்ளேயைச் சுமந்தபடி, ஒவ்வொன்ருக.)

அவை:

வேடுகட்டிய ஒரு தவலே, ஒரு மூட்டை ஒரு கூஜா செம்பு, சர்க்கரைச் சீசா, சோப்புப் பெட்டி, பாலடை, சீப்பு முதலி

யவை அடங்கிய ஒரு சிறு தகரப்பெட்டி, பிள்ளை தடுக்கு, மெத்தைச் சுருணை, தலையணைக்கட்டு, பலகாரம் அடங்கிய ஒரு டின், வெற்றிலை பாக்குப் பெட்டி, செறுப்பு ஒரு ஜோடி, அப்போது கட்டிக் கொள்ளவேண்டிய புடவை, அப்போது போட்டுக்கொள்ளவேண்டிய நகை, ஒட்டியாணம், கண்ணடி, பிள்ளைகளின் உடைகள், நகைகள்.

*[இதற்குள் பெ. எ. டிரங்கில் உடுப்பு அடுக்கிக்கொண்டே கூறுகிறார்.]*

பெ. எ: கணக்கப்பிள்ளே

கணக்கன்: இதோ புஸ்தகங்களை எடுத்துவைக்கிறேன்.

பெ. எ: ஆரையாவது அனுப்பு கொல்லைக் கதவைச் சாத்தச் சொல்லு....நானே சாத்திவிடுறேன்.

*(ஓடிச் சாத்துகிறார்.)*

(கனகத்தை நோக்கி) ஆச்சா? நாழிகை ஆகிறது. சாமான்களை யெல்லாம் வண்டியிலே எடுத்துவை ஓடு.

(வெளியில் போகிருர். வண்டியில்கூண்டு மூடுகிறவனைப் பார்த்து.)

போதும்டா.

குப்பன்: சரி. (கூண்டை மேலோடு வைத்துவிடு கிருன்.)

பெ. எ: வண்டியை கட்டு, மாட்டெ ஓட்டிவா (குப்பன் கொல்லைநோக்கிப் போகிருன்.)

பெ. எ. (உள்ளே தலை வாரிக்கொண்டிருக்கும் கனகத்தை ஓர் அறை அறைந்து.) முண்டே! நாழிகை ஆகிறது. (என்று கூறி டிரங்கு தடுக்கக் கீழேவிழுகிருர். எழுந்து சாமான்களை எடுத்துக்கொண்டு வண்டியை நோக்கி ஓடி, அதில்வைத்து அவசரமாகத் திரும்பி மற்றும் சாமான் களை யெடுத்து வருவதற்குள் கழுதை ஓர் அறையில் புகுந்துவிடுகிறது. கனகமும் சாமான்களை வண்டியில் கொண்டுவைக் கிருள்.

பெ. எ: தவலை வேண்டாம்.

என்று கூறி அதை அறையில் வைக்க நுழைகிருர். கனகம் அவசரமாகக் கதவை இழுத்துச் சாத்திப் பூட்டிவிடுகிருள்.

அதே அறையில் கழுதையும் இருந்ததால் அதனிடம் பெ. எ. உதைபடுகிறதால் ஏற்படும் கதறல் வீட்டைப் பிளக்கிறது)

பெ. எ:- ஐயையோ !ஐயையோ!!
(கனகம் கதவைத் திறக்க, பெ. எ. பல் உடைந்தபடி வெளியே வந்து விழுகிருர். அறையில் கனகம் நுழைகிருள். இது பெ. எஜபானுக்குத் தெரியாது. அவசரமாக எழுந்து கதவைச் சாத்துகிருர். கழுதை கனகத்தை உதைக்கிறது.)

கனகம்:- ஐயையோ! ஐயையோ!!
(பெ. எ. கதவைத்திறக்கிருர். மண்டை உடைந்தபடி கனகம் வெளியில் வந்து விழுகிருள் கழுதை இருப்பது தெரிகிறது.

பெ. எ. அதைரியப்படாதே. எழுந்திரு வண்டியிலேறு. (கழுதையை நோக்கி.) உஸ். சீ. (தனக்குள்) உள்ளேயே கிடந்து ஒழி (கதவைச் சாத்துகிருர்.

அடுத்த அறையில் தன் 8. வயதுப்பையன் என்னமோ எடுக்கிருன். அது தெரியாமல் பூட்டி விடுகிருர். 8. வயது பிள்ளை தவிர மற்ற பிள்ளைகள் சாமான்கள் வண்டியில் ஏற்றுமதி நடந்து விட்டது.)

பெ. எ:- கணக்கப்பிள்ளே. பத்திரம். நான் இரண்டு மூன்று நாளில் வந்துவிடுகிறேன்.

(வண்டியில் ஏறக், கூண்டுசாய்கிறது.)

அனைவரும்:- ஐயையோ!

குப்பன்:- பயப்படாதிங்க. இதோ சரிப்படுத்திவிடு கிறேன் (என்று இறங்க முயலுகிருன்.)

பெ. எ:- கூண்டு இல்லாவிடில் பாதகமில்லே ஓட்டு.

(கூண்டு இல்லாத வண்டி ஓடுகிறது.)

கனகம்:- எல்லா சாமான்களும் சரியாய் எடுத்து வைச்சாச்சோ என்னமோ.

பெ. எ:- வச்சாச்சி. ரயில் அகப்படுமா குப்பா!

குப்பன்:- ஆகா நல்லா.

பெ. எ:- ஓட்டு வண்டியை,

குப்பன்:- ஏய்....(மாட்டை அபாரமாக அடித்து விரட்டுகிருன். வண்டியில் கடையாணி இல்லாததால் இரு சக்கரமும் ஏக காலத்தில் கழன்று, பார் நிலத்தில் உட்கார்ந்து விடுகிறது. பிள்ளேகள் கீழே உருளுகின்றனர், கனகம் விழுந்து எழுந்து பிள்ளேகளேக் காப்பாற்றுகிருள். 8 வயதுள்ள பிள்ளே பெயர் ராமு.)

கனகம்:- ஐயோ! ராமு எங்கே?
(இதற்குள் எதிரில் ஒரு கூண்டுவண்டி வருகிறது. பெ. எ. கைகாட்டி நிறுத்துகிறார். சாமான்கள் ஏற்றப்படுகின்றன, பிள்ளைகள் ஏற்றப்படுகிறார்கள்.)

கனகம்:- ராமுவைக் காணோமே.
(என்று கூவுகிறாள்.)

பெ. எ:- மணி ஆகிவிட்டது. ஓட்டு வண்டியை.
(என்று கத்துகிறார்.)

குப்பன்:- பொறுமை கடலிலும் பெரிது. (என்று கத்துகிறான். வண்டி ஓடுகிறது.)

கனகம்:- ராமுவைக் காணோமே, ஐயோ.

பெ. எ:- ராமு எங்கே? (இறங்கி வண்டிவந்த வழிநோக்கி ஓடுகிறார். திரும்பி ஓடிவந்து) வீட்டிலேயே தங்கிவிட்டானோ?

கனகம்:- அப்படித்தான் இருக்கும்.
(பெ. எ. வீட்டை நோக்கி ஓடுகிறார். திரும்பி ஓடிவந்து)

பெ. எ:- வீட்டுச் சாவி எங்கே?

கனகம்:- என்னிடம் கொடுக்கலியே.

பெ. எ:- போடி முண்டே (என்று ஓடுகிறார். திரும்பி ஓடிவந்து,)

கனகம்! கணக்குப்பிள்ளையிடம் இருக்குமா சாவி?

கனகம்:- இருக்கும்.
(பெ. எ. ஓடுகிறார். திரும்பி ஓடிவந்து.)

பெ. எ:- வண்டியை ஓட்டு. டிக்கட்டு வாங்கிவிடு. நான் எப்படியாவது வந்துவிடுகிறேன். ஆம்பளை!

கனகம்:- சரி,
(வண்டி ஓடுகிறது. பெ. எ. ஓடுகிறார் வீட்டை நோக்கி. கணக்குப்பிள்ளை வீடு சாத்தியிருக்கிறது. பெ. எ. கதவைத் தட்டுகிறார் விரைவாக.)

பெ. எ:- கணக்குப்பிள்ளை!

கணக்கன்:- (உள்ளே யிருந்தபடி.) யாரடா அவன்?

பெ. எ:- நான்தான் பெரிய எஜமான்.

கணக்கன்:- ஏன். என்ன சங்கதி. நீங்களா? ரயில் அகப்படலியா?

பெ. எ:- சாவி கொடு.

கணக்கன்:- எந்தச் சாவி?

பெ. எ:- வீட்டுச் சாவி.

கணக்கன்: ஏன்?

பெ. எ: பையனை வீட்லே விட்டுச் சாத்திவிட்டுப் பூட்டேன், அவசரத்தில்!

## பொறுமை கடலிலும் பெரிது

கணக்கன்: அடடட அதுதான் அறையில் சத்தம் கேட்டதோ. பையனை அறையில் விட்டுச் சாத்திவிட்டிங்க.

பெ. எ:- ஐயையோ! என்ன பண்ணுவேன். அடடா. வாயேன் வெளியே. என்ன பண்றே?

கணக்கன்:- இதோ வந்துட்டேன்.

பெ. எ:- சாவியாவது குடேன்.

கணக்கன்:- இதோ வந்துட்டேன்.

பெ. எ:- என்னடா பண்றே. பாவி.

கணக்கன்:- பொறுமை கடலிலும் பெரிசு. எண்ணெய்த் தலையோடு இருக்கேன் இதோ வந்துட்டேன்.

பெ. எ:- சாவியைக் கொடுத்தனுப்பேன்.

கணக்கன்:- வீட்டில் யாரும் இல்லே.

பெ. எ:- ஜன்னலால் போடு.

கணக்கன்:- எதை?

பெ. எ:- அறைக்கதவு சாவியை.

கணக்கன்:- என்னிடம் ஏது.?

பெ. எ:- பின் எங்கே?

கணக்கன்:- எங்கே வச்சிங்க?

பெ. எ:- வீட்டுக் கதவு சாவிகொடு.

**கணக்கன்:-** அறையில் தானே பிள்ளை யிருக்கான்?

பெ. எ:- (கதவை உடைக்கிறான். கதவு உடைந்து விடுகிறது. எதிரில் நிற்கிறான் கணக்கன்.) சாவி கொடு!

**கணக்கன்:-** பொறுமை கடலிலும் பெரிது. இந்தாங்க சாவி.

(சாவியை வாங்கிக் கொண்டு வீட்டை நோக்கி ஓடுகிறார் பெ. எ.

அவசரமாக வீட்டைத் திறக்கிறார். கொத்துச் சாவியிலிருக்கும் வேறு சாவியைப் போட்டு. பிறகு சரியான சாவியால் திறந்து உள்ளே ஓடுகிறார். அறைக் கதவு சாவியைத் தேடுகிறார். அகப்பட வில்லை. அங்கிருந்த கடப்பாறையால் அறைக் கதவை உடைக்கிறார். கழுதை வெளியே ஓடி வருகிறது.

பிறகு இரண்டாவது அறைக்கதவை உடைக்கிறார், பிள்ளை படுத்துத் தூங்குகிறான். அள்ளி யெடுக்கிறார்.)

பெ. எ:- ஓடியா தம்பி. தெரியாமல் சாத்திவிட்டேன்.

(இழுத்துக்கொண்டு ஓடிவிடுகிறார் வீட்டைச் சாத்தாமல்.)
(சிறிது தூரம் செல்ல.)

பெ. எ:- அடடா! வீட்டைப் பூட்டவில்லை, போ தம்பி ஸ்டேஷனுக்கு! இதோவந்துட்ரேன்.
(வீட்டை நோக்கி ஓடுகிறார். பையன் சோக்கமாக அங்கு உட்கார்ந்துவிடுகிறான் திரும்பி. பெ. எ. ஓடி வருகிறார். பையன் சோர்ந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அவனைத் தோளில் தூக்கிக் கொண்டு ஓடுகிறார்.
எதிரில் கனகம் வண்டி ஓடி வருகிறது கண்ட பெ. எ.)

பெ. எ:- என்ன சங்கதி? ஏன்?

கனகம்:- பணம் என்னிடம் கொடுக்க வில்லையே! டிக்கட் வாங்க!

பெ. எ:- சரி. சரி. என்னிடம் இருக்கிறது.
(வண்டியில் அனைவரும் ஏறிக்கொள்ள வண்டி ஸ்டேஷனை நோக்கி ஓடுகிறது. ரயில் ஸ்டேஷனை அடைகிறது.)

பெ. எ:- (புக்கிங்கிளார்க்கை நோக்கி) டிக்கட் கொடுங்க.

கிளார்க்கு:- எந்த ஊருக்கு?

பெ. எ:- பட்டணம். (பையில் கையை விடுகிறார்.)

கிளார்க்கு:- எத்தனை?

பெ. எ:- மூணரை. சீக்கிரம் கொடுங்க.

கிளார்க்:- பணம்?

பெ. எ:- அடட. இதோ வந்து விட்டேன். (தன் மனைவியை நோக்கி) மணி பர்ஸ் எங்கே?

கனகம்:- யாரைக் கேட்கிறீர்.

பெ. எ:- எங்கே என் டிரங்கு?

கனகம்:- உங்கள் டிரங்கை எடுத்து வைக்கலே:

பெ. எ:- ஐயையோ! (குப்பனை நோக்கி) என்ன பண்ணுவேன்.

(ரயில் ஓடுகிறது. சென்னையை நோக்கி!)

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

Forms Printed at the Navalar Power Press, Karaikudi. 44.